RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 28, 11 மார்ச் 2022 இதழ்:- 46

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

ஈழநாடு மின்னிதழ் eelanadu.ca

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

# மனிதஉரிமைகள் - நல்லிணக்கம் - சமாதானம் பொறுப்புக்கூறல் விடயத்தில் கரிசனை எழுப்பி 13வது திருத்தம், மாகாணசபை


# ஜெனிவாவில் வலியுறுத்திய இந்தியப் பிரதிநிதி!



இலங்கை தொடர்பான மனிதஉரிமை ஆணையாளரின் அறிக்கை மனித உரிமைகள் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் தொடர்பில் முக்கிய கரிசனைகளை எழுப்பியுள்ளது என இந்தியா தெரிவித்துள்ளது. நிகழ்ச்சி நிரல் 2 இன் கீழ் இந்தியாவின் அறிக்கை: மனித உரிமைகள் பேரவையின் 49வது அமர்வின் போது (28 பெப்ரவரி 1 ஏப்ரல் 2022) இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கான OHCHR இன் எழுத்துப் பூர்வ அறிக்கையின் கலந்துரையாடலில், தூதுவர் இந்திராமணி பாண்டே இதனை தெரிவித்துள்ளார். ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளின் இலங்கை தொடர்பான அறிக்கை இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மனித உரிமைகள் தொடர்பில் முக்கியமான கரிசனைகளை (5ம் பக்கம் பார்க்க)

GT Brokers Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

## தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெற்றி கொள்வதில் அமெரிக்காவின் முழுமையான ஒத்துழைப்பு கிடைக்கும்! கூட்டமைப்பினருக்கு அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு!



தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெற்றி கொள்வதில் அமெரிக்காவின் முழுமையான ஒத்துழைப்பும் உதவிகளும் கிடைக்கும் எனவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரங்களில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் விதமாக எதிர்வரும் செப்டெம்பரில் கொண்டு வரும் விரிவான அறிக்கையை (9ம் பக்கம் பார்க்க)

## பொறுப்புக்கூறல் - நல்லிணக்க செயற்பாடுகளில் இலங்கை பின்னடைவு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படாத கலாச்சாரம் நீடிக்கிறது! ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கடும் கவலை!

## கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி! போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE


BUYING OR SELLING OR LEASE !
Residential or Commercial
Team SIVA WILL BRING THE BEST RESULTS!
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Piravien Siva
B.Comm. Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
18 Years Real Estate Experience
HOMELIFE
HIGHER STANDARDS
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Markham & Brimortan
FOR LEASE
Scarborough $1,850
Bedrooms: 2 Washrooms: 2
All Utilities Included
Derry/Goreway
Mississauga $498,900
Bedrooms: 2 Washrooms: 1
Great Opportunity First Time Buyers
Burnamthorpe/Living Arts
Mississauga $499,000
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Kitchen
Kennedy / Hwy 401
Scarborough $699,000
Bedrooms: 2+1 Washrooms: 2
Approx. 790 Sq Ft.
Yonge & Finch
Toronto $819,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1150 Sf Plus Balcony
Bleasdale/ Creditview
Brampton $849,000
Bedrooms: 3 Washrooms: 2
End Unit, Villa Freehold Home
Park Rd S/Phillip Murray Ave
Oshawa $899,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Close To Schools, Shopping
Rossland And Ravenscroft
Ajax $899,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Huge Open Concept Kitchen
Mclaughlin/Elgin
Brampton $949,000
Bedrooms: 3+2 Washrooms: 4
Updated Kitchen, Pot Lights
Brock & Dellbrook
Pickering $1,299,000
Bedrooms: 4+2 Washrooms: 4
Family Size Kitchen W/Out To Deck
Markham/Ellesmere
Scarborough $1,299,999
Bedrooms: 4+2 Washrooms: 5
Newly Renovated
Ellesmere/Conlins
Scarborough $1,299,999
Bedrooms: 4+1 Washrooms: 4
Basement W/Separate Entrance
Westney/Rossland
Ajax $1,499,000
Bedrooms: 4 Washrooms: 5
Over 4600 Sq Ft Of Living Space.
Bovaird/Torbram
Brampton $1,499,999
Bedrooms: 3+2 Washrooms: 4
Brand-New Kitchen
Richmond St W/Peter St
FOR LEASE
Toronto $2,250
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout Of 790 Sq Ft
Sheppard Ave E/ 404
FOR LEASE
Toronto $2,600
Bedrooms: 2+1 Washrooms: 2
Good Exposure W/Natural Light
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 JAFFNA SUPER STORES
1221 MARKHAM RD - 14
(MARKHAM / EELESMERE)

3 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

4 AGP MART
4A WADE AVE
TORONTO


5 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

6 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

### மொன்றியல் தொடர்புகளுக்கு
மார்சே துர்க்கா
**(514) 276 9262**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன் கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## கியூபாவிற்கான சுற்றுலா

கனடாவிலிருந்து குளிர்காலச் சுற்றுலாவுக்காக உங்களை பாதுகாப்பாக கியூபாவுக்கு அழைத்துச் செல்கின்றோம்.
உங்கள் விமானச் செலவு, தங்குமிட வசதிகள் உட்பட அனைத்துச் செலவு (Pakcage) உடன் மேலதிகமாக 400.00 டொலர்கள் மட்டுமே!
இத்தொகையில் ஊர்க்கோழி, ஆட்டுக்கறி, கடலுணவு வகைகள், நமது முறைப்படி சமைத்து நீங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கே கொண்டு வந்து தருவதுடன் குதிரைச் சவாரி, 5க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்களையும் பார்வையிடலாம்.
முதியோருக்கான விசேட கவனிப்பு

மேலதிக விபரங்கட்கு - தவா
647.469.9839/647.333.0098



04 ஜனவரி 2022, 25 ஏப்ரல் 2022 இரண்டு சுற்றுலா குழு புறப்படுகின்றது. பதிவு செய்து கொள்ளுங்கள்


# வடக்கு கிழக்கில் இடம் பெறும் நில அபகரிப்புக் குறித்து பிரிட்டன் கவலை!

இலங்கையின் வடக்கு கிழக்கில் இடம்பெறும் நில அபகரிப்பு குறித்து பிரிட்டன் கவலை வெளியிட்டுள்ளது. ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் உரையாற்றுகையில் பிரிட்டனின் மனித உரிமைகளிற்கான சர்வதேச தூதுவர் ரிட்டா பிரென்ஞ் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

பொறுப்புக்கூறல் விடயத்தில் தொடர்ந்தும் முன்னேற்றம் ஏற்படாதது குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் கரிசனையை நாங்கள் பகிர்ந்து கொள்கின்றோம் உலகின் கவனத்தை ஈர்த்த பல மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் பின்னடைவுகள் காணப்படுகின்றன என்பது குறித்து நாங்கள் ஏமாற்றமடைகின்றோம்.

கவிஞர் அஹ்னாவ் ஜசீம் மற்றும் சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ்புல்லா விடுதலை செய்யப்பட்டதை சாதகமான முதற் கட்ட நடவடிக்கை என நாங்கள் வரவேற்கின்றோம்.

அதேவேளை பயங்கரவாத தடைச் சட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஆரம்ப சீர்திருத்தங்களை நாங்கள் அங்கீகரிக்கும் அதேவேளை இவை போதுமான அளவிற்கு செல்லவில்லை என்பதை தெரிவிக்கின்றோம். சிவில் சமூகத்தினர் துன்புறுத்தப்படுவது அச்சுறுத்தப்படு



வது சிவில் நிர்வாக செயற்பாடுகள் இராணுவ மயப்படுத்தப்படுவது நன்கறியப்பட்ட மனித உரிமை சம்பவங்களில் குறிப்பிடப்பட்ட நபர் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டமை போன்றவை குறித்து நாங்கள் கரிசனைகளை கொண்டுள்ளோம்.


குறிப்பாக இந்த நியமனம் கடும் கவலையளிக்கின்றது. இழப்பீடு மற்றும் காணாமல் போனவர்கள் குறித்து அரசஸ்தாபனங்களில் இடம் பெறும் செயற்பாடுகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளும் அதேவேளை இவை முழுமையான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறும் செயற்பாடுகளுடன் இணைந்ததாக காணப்படுவது அவசியம்.

இலங்கையில் சிறுபான்மை சமூகத்தினர் அதிகளவு புறக்கணிப்பை எதிர் கொள்வது மற்றும் நாட்டின் வட கிழக்கு பகுதிகளில் இடம் பெறும் நில அபகரிப்பு குறித்து நாங்கள் கரிசனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். 46-1 தீர்மானம் குறித்து இலங்கை ஆக்கபூர்வமான விதத்தில் ஈடுபாட்டை காண்பிக்க வேண்டும் ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்திற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இதேவேளை ஈஸ்டர் தாக்குதலானது அரசியல் சதி யொன்றின் அங்கமாகவே இடம் பெற்றுள்ளதாக கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை யில் தெரிவித்துள்ளார். மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலை இஸ்லாமிய கடும் போக்குவாதிகளே நடத்தினர் என்று ஆரம்பத்தில் கருதிய போதும், இது அரசியல் சதியொன்றின் அங்கமாக இடம் பெற்றுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு தலையீடு செய்யுமாறு அவர், மனித உரிமைகள் பேரவையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஜனாதிபதி - கூட்டமைப்பு செவ்வாயன்று சந்திப்பு!



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் எதிவரும் 15 மார்ச் 2022 செவ்வாய்க் கிழமை சந்தித்துப் பேசவுள்ளனர். இந்தச் சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தரப்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன் உட்பட அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசாவும் பங்கேற்கவுள்ளார்.

இதனை மாவை சேனாதிராசா ஈழநாடுவுக்கு உறுதிப்படுத்தினார். மேலும் இந்தச் சந்திப்பின் போது வடக்கு, கிழக்கில் காணி ஆக்கிரமிப்பு – சுவீகரிப்பு தொடர் பாகவும் புதிய அரசமைப்பு திருத்தம் பற்றியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியுடன் உள்நாட்டு விவகாரங்களுக்கான அமைச்சர் சமல் ராஜபக்ஷவும் பங்கேற்பார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக பல மாதங்களுக்கு முன்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு திட்டமிடப் பட்டிருந்த போதிலும் பல்வேறு காரணங்களால் நடைபெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது


## Balachandran Law Office
### Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்,
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
**416 755 5544**



# ராஜீவ்காந்தி கொலை வழக்கு:- 32 ஆண்டுகளுக்கு பின் பேரறிவாளனுக்கு பிணை வழங்கிய உச்ச நீதிமன்றம்!



இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் பேரறிவாளனுக்கு பிணை வழங்கி இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விடுதலை செய்யக் கோரி பேரறிவாளன் தரப்பில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின் போது, பரோலில் இருந்தாலும் வெளியில் செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே பிணை வழங்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று உச்ச நீதிமன்றம் பேறிவாளனுக்கு பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று கடந்த 32 ஆண்டுகளாக சிறையில் இருந்து வரும் பேரறிவாளன் தற்போது சிறை விடுப்பில் இருந்து வருகிறார். அவருக்கு 32 ஆண்டுகளுக்குப் பிறகு பிணை வழங்கி உச்ச நீதிமன்றம் 09 மார்ச் 2022 உத்தரவிட்டுள்ளது.

பேரறிவாளனுக்கு பிணை வழங்க இந்திய மத்திய அரசு தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட நிலையில், இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கும், மத்திய அரசு தரப்பில் வழக்குரைஞருக்கும் இடையே காரசார வாதங்கள் நடைபெற்று முடிந்த நிலையில் பிணை வழங்கப்பட்டுள்ளது.

பேரறிவாளனுக்கு பிணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு உச்ச நீதிமன்றத்தில் 09 மார்ச் 2022 புதன்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, பேரறிவாளன் விவகாரம் தங்கள் அதிகாரத்தின் கீழ் வரும் போது தமிழக அரசு முடிவெடுக்க முடியாது. சம்பந்தப்பட்ட அரசு தான் விடுதலை செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது என்று மத்திய அரசு கூறியது.

அப்படி என்றால் அது மாநில அரசு தான் என மத்திய அரசின் வாதம் குறித்து உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. சிறை விதிகளுக்குள்பட்டு பரோல் வழங்கலாமே தவிர ஜாமீன் வழங்கக் கூடாது என்று மத்திய அரசு தரப்பில் கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் மீதான தீர்மானத்தின் மீது ஆளுநர் முடிவெடுக்க முடியாது. குடியரசுத் தலைவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியே முடிவெடுக்க முடியும் என்றும் பரோலில் உள்ள பேரறிவாளனுக்கு ஜாமீன் வழங்க மத்திய அரசு எதிர்ப்பு தெரிவித்தது.

அதிகாரம் பற்றி பிறகு விசாரிக்கிறோம். இப்போது பிணை பற்றி விசாரிக்கலாம். 3 முறை பரோல் வழங்கப்பட்ட போதும் விதிகளுக்கு உள்பட்டுத் தான் வழங்கப்பட்டுள்ளது என்று பேரறிவாளன் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

பேரறிவாளனுக்கு மூன்று முறை சிறை விடுப்பு அளிக்கப்பட்டிருந்தும் அவர் எவ்வித தவறுகளும் செய்யவில்லை என்பதையும் பேரறிவாளனது சட்டத்தரணி சங்கரநாராயணன் சுட்டிக் காட்டினார். மேலும் தண்டனைக் காலத்தில் அவருடைய நடத்தை சிறப்பாக இருந்ததையும் அவர் தனது கல்வித் தகுதியை வளர்த்துக் கொண்டது குறித்தும் சிறையில் உள்ள நூலகத்தில் உதவி செய்தது குறித்தும் வழக்கறிஞர் சுட்டிக் காட்டினார்.

மகாத்மா காந்தி கொலைவழக்கைச் சுட்டிக்காட்டிய ராகேஷ் த்விவேதி, அந்த வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற கோபால் கோட்சே தண்டனை குறைப்புப் பெற்று 14 ஆண்டுகளில் விடுவிக்கப்பட்டார். ஆனால், பேரறிவாளன் 32 ஆண்டுகளை சிறையில் கழித்திருக்கிறார் என்று குறிப்பிட்டார்.

பேரறிவாளன் ஏற்கனவே 32 ஆண்டுகளாக சிறையில் உள்ளார். மேலும் தாமதம் செய்வது எப்படி? என்று உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

அதற்கு ஏற்கனவே தண்டனை குறைப்பு செய்யப்பட்டுள்ளது. மீண்டும் ஒரு சலுகையை எப்படி ஏற்பது என்று மத்திய அரசு கேட்க, தண்டனை குறைப்பு என்பதை உச்ச நீதிமன்றம்தான் வழங்கியது என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

இதற்கு ஆயுள்தண்டனை என்றால் ஆயுள் முழுக்க சிறையில் இருக்க வேண்டும் என்பது தான் என்று மத்திய அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசின் கடும் எதிர்ப்பையும் மீறி, உச்ச நீதிமன்றம் பேறிவாளனுக்கு பிணை வழங்க உத்தரவிட்டுள்ளது. 1991ஆம் ஆண்டு பேறிவாளன் கைது செய்யப்பட்ட பிறகு, 32 ஆண்டுகளுக்குப் பின் தற்போது தான் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 17 பெப் 2021 புதுச்சேரியில் பாரதிதாசன் அரசு கல்லூரிக்கு ராகுல் காந்தி சென்றார். அங்கு மாணவிகளின் கேள்விக்கு பதிலளித்த அவரிடம் ஒரு மாணவி ராஜிவ் காந்தி கொலை செய்யப்பட்டது தொடர்பான கேள்வியை எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த ராகுல் எனக்கு அது கடுமையான நேரமாக இருந்தது. உங்களில் யாரேனும் தந்தையை இழந்திருந்தால் எனது வலி உங்களுக்குப் புரியும். எனது தந்தையை இழந்தது என் நெஞ்சை பிளந்தது போல் இருந்தது. அது மிகப்பெரிய வலியைத் தந்தது.

ஆனால் என் தந்தையை கொன்றவர்களை மன்னித்து விட்டேன், அவர்கள் மீது கோபமோ வெறுப்போ இல்லை,' என்று தெரிவித்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

மெக்சிக்கோ சுற்றுலா



ஒவ்வொரு மாதங்களிலும், மூன்றாவது கிழமைகளிலும், மெக்சிகோவில் உள்ள வேறு மாவட்டங்களுக்கும் வேறு நகரங்களுக்கும் 2022 தை மாதம் தொடக்கம், மார்கழிமாதம் வரை. 7 நாட்களுக்கு யாவும் உள்ளடக்கப்பட்டது.

| 3 star | 3½ star | 4 star | 4½ star | 5 star |
|---|---|---|---|---|
| REGULAR C$1,250 | REGULAR C$1,500 | REGULAR C$1,750 | REGULAR C$2,000 | REGULAR C$2,250 |
| SALE PRICE C$ 1,000.00 | SALE PRICE C$ 1,250.00 | SALE PRICE C$ 1,500.00 | SALE PRICE C$ 1,750.00 | SALE PRICE C$ 2,000.00 |

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

நல்ல சேவைக்கு விளம்பரம் தேவையில்லை. மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஒருமுறை மட்டும் தான் வரும் விளம்பரத்தை எடுத்து வைக்கவும்.

a1actour.com@gmail.com

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது: விமான சீட்டு, தங்குமிட வசதி, விமான நிலையத்திற்கும் தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை, காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு, மது பானம், குளிர்பானம், சுடுபானம்

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide,மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078, TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER

www.a1actour.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956

# மனிதஉரிமைகள் - நல்லிணக்கம் - சமாதானம் பொறுப்புக்கூறல் விடயத்தில் கரிசனை எழுப்பி 13வது திருத்தம், மாகாணசபை தொடர்பில் ஜெனிவாவில் வலியுறுத்திய இந்தியா!

இலங்கை தொடர்பான மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை மனித உரிமைகள் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் தொடர்பில் முக்கிய கரிசனைகளை எழுப்பியுள்ளது என இந்தியா தெரிவித்துள்ளது.

நிகழ்ச்சி நிரல் 2 இன் கீழ் இந்தியாவின் அறிக்கை: மனித உரிமைகள் பேரவையின் 49வது அமர்வின் போது (28 பெப்ரவரி — 1 ஏப்ரல் 2022) இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கான OHCHR இன் எழுத்துப் பூர்வ அறிக்கையின் கலந்துரையாடலில், தூதுவர் இந்திராமணி பாண்டே இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளின் இலங்கை தொடர்பான அறிக்கை இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மனித உரிமைகள் தொடர்பில் முக்கியமான கரிசனைகளை எழுப்பியுள்ளது என இந்தியா மனித உரிமை பேரவையில் தெரிவித்துள்ளது.

மனித உரிமை ஆணையாளரின் இலங்கை குறித்த அறிக்கையையும் அவரது வாய்மூல அறிக்கையையும் நாங்கள் கருத்தில் கொண்டுள்ளோம் நண்பன் மற்றும் அயல்நாடு என்ற அடிப்படையில் இலங்கையில் தமிழர்களின் நலன்களை பாதுகாப்பது தொடர்பான அர்ப்பணிப்புகளை இலங்கை நிறைவேற்ற வேண்டும் என தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வந்துள்ளோம் என இந்தியா தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாசைகளிற்கு தீர்வை காண்பதற்கான அவசியமான நடவடிக்கைகளை இலங்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள இந்தியா தமிழ் மக்களின் நீதி சமத்துவம் கௌரவம் ஆகியவற்றிற்கான அபிலாசைகளிற்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை காண்பது இலங்கையின் சொந்த நலனுடன் தொடர்புபட்ட விடயம் எனவும் இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் அரசமைப்பின் 13 வது திருத்தத்தின் ஊடாக உட்பட அர்த்தபுஸ்டிமிக்க அதிகாரபகிர்வினை முன்னெடுப்பதாக இலங்கை அளித்துள்ள வாக்குறுதிகளும் இந்த விடயத்திற்கு பொருந்தக்கூடியவை என இந்தியா தெரிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை மற்றும் நல்லிணக்கப் பிரச்சினைகளின் பல்வேறு அம்சங்களில் சர்வதேச சமூகம் மற்றும் பிற தொடர்புடைய அமைப்புகளுடன் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளதை இந்திய தூதுக்குழு கவனத்தில் எடுத்துள்ளது.




சம்பந்தப்பட்ட தரப்புகளோடு இதுபோன்ற ஈடுபாட்டுடனான ஆக்கபூர்வமான மற்றும் பிரயோசனமளிக்கும் உரையாடல்கள் தொடர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.என இந்தியா தெரிவித்துள்ளது

இந்த அறிக்கை இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் விடயங்களில் முன்னேற்றம் பற்றிய முக்கியமான கவலைகளை எழுப்புகிறது. அனைத்து குடிமக்களின் உரிமைகளும் முழுமையாக பாதுகாப்பதற்கும்

அடிப்படை சுதந்திரங்கள் மற்றும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும், நல்லிணக்க செயல்முறையை முன்னெடுத்துச் செல்வது மற்றும் இலங்கையின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல்படுத்துவது உட்பட, தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கையை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். என இந்தியா தெரிவித்துள்ளது

அதிகாரப் பகிர்வுக்கான அதன் அர்ப்பணிப்பிற்கு அமைவாக மாகாண சபைகளுக்கான தேர்தலை முன்கூட்டியே நடத்துமாறு இலங்கை அரசாங்கத்தை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவோம். என இந்தியா தெரிவித்துள்ளது

# அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்!

## இந்தியாவின் நிலைப்பாட்டை வரவேற்கும் சுமந்திரன்

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஜெனிவா மாநாட்டில் இந்தியா வலியுறுத்தியுள்ளது. இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை கருத்தை நாம் வரவேற்கின்றோம். நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கையில் அமுலில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை மாத்தளை நகரிலும் முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி சட்டத்தரணியான எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என இந்த நாட்டில் உள்ள அனைத்து இன மக்களும் வலியுறுத்தி வருகின்றனர். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலும் இவ்விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசால் (20ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் நிலைப்பாடு புதிதல்ல!

இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான தமது நிலைப்பாட்டை மீண்டுமொருமுறை ஐ. நாவில், இந்தியா உறுதிப் படுத்தியிருக்கின்றது. ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத் தொடர் இடம்பெற்று வருகின்ற நிலையில் இலங்கை தொடர்பான விவாதத்தின் போது இந்தியாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தமது நிலைப்பாட்டை தெளிவு படுத்தியிருக்கின்றார்.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு புதிய ஒன்றல்ல. ஏற்கனவே நாம் அறிந்த ஒன்று தான். அதாவது, இலங்கையின் நண்பன் மற்றும் உடனடி அயல்நாடு என்னும் வகையில் தமிழ் மக்களின் நலன்களை பாதுகாக்கும் வகையில் இலங்கை அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுமாறு இந்தியா கோருகின்றது

தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில், நல்லிணக்க முயற்சிகளை முன்னெடுப்பதுடன், அரசியல் யாப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதுடன், தமிழ் மக்களின் கௌரவம், சமத்துவம், சமாதானம் மற்றும் நீதி ஆகியவற்றை உறுதிப்படுத்துமாறும் இந்தியா கோருவதாக குறித்த பேச்சு அமைந்திருக்கின்றது. 13ஆவது திருத்தச் சட்டத்தையும் உள்ளடக்கியவாறு, அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை ஏற்படுத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

இந்திய பிரதமர் மோடிக்கு ஆறு கட்சிகள் இணைந்து கடிதம் எழுதியதற்கும் இதற்கும் எவ்வித தொடர்புமில்லை. ஏனெனில், இது இந்தியாவின் பழையதும், உறுதியானதுமான நிலைப்பாடு. இந்த நிலைப்பாட்டுக்கு வலுச் சேர்க்கும் வகையில் தான் – ஆகக் குறைந்தது 13ஆவது திருத்தச் சட்டத்திலாவது. தமிழ் கட்சிகள் ஒன்றாக நிற்க வேண்டுமென்னும் ஆலோசனையை இந்திய வெளிவிவகாரச் செயலர் வழங்கியிருந்தார்.

தமிழ் கட்சிகள் பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் தமது கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை இந்திய பிரதமருக்கு அனுப்பியிருந்தன. கடிதத்தின் உள்ளடக்கம் தொடர்பில் தேவையற்ற சர்ச்சைகள் எழுந்தன. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மக்களை திரட்டி எதிர்ப்பு தெரி வித்திருந்தார். இதனைத் தொடர்ந்து, சம்பந்தன், 13ஆவது திருத்தத்தை நாங்கள் கோரவில்லை என்றவாறு இந்திய தூதுவருக்கு வகுப்பெடுத்ததாக கதைகள் புனையப்பட்டன. ஆனால், அனைத்தும் விழலுக்கிறைத்த நீராகியிருக்கின்றது.

இந்தியாவால் அதற்கு உரித்துள்ள 13ஆவது திருத தச் சட்டத்தையே கோரமுடியும் அதிலிருந்து அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை நோக்கிச் செல்வதென்பது, இலங்கையின் பிரச்னையாகும் அது தொடர்பில் இலங்கை அரசாங்கம் தான் சிந்திக்க வேண்டுமென்னும் நிலைப்பாட்டையே இந்தியா மீண்டுமொரு முறை வலியுறுத்தியிருக்கின்றது. இப்போது 13 தொடர்பில் அதிகம் அலட்டிக் கொண்டவர்கள் என்ன செய்யப் போகின்றனர்? இந்தியாவை எதிர்த்து செயல்படப் போகின்றனரா? எதிர்த்துக் கொண்டு எங்கு செல்வது?

ரஷ்யாவின் உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கை உலக அரசியல் ஒழுங்கில் பல கேள்விகளை எழுப்பியிருக்கின்றது. அமெரிக்க அணுகுமுறையை ஆசிய நாடுகள் வரவேற்கவில்லை. அமெரிக்காவின் நல்ல நண்பர் என்று வர்ணிக்கப்படும் ரணில் விக்கிரமசிங்க கூட, இது அவர்களின் வியாபராம் – அவர்கள் பொருளாதார தடை விதிக்கின்றனர் என்பதற்காக நாங்கள் ரஷ்யாவுடனான வர்த்தகத் தொடர்புகளை துண்டித்துக் கொள்ள வேண்டியதில்லை. இது அடிப்படையில் ஐரோப்பாவின் பிரச்னை என்கிறார். அரசியல் சூழல்கள் வேகமாக மாறிக் கொண்டிருக்கின்றன இந்தியாவின் வதிவிடப் பிரதிநிதி, தனது உரையில் ஒரு (21ம் பக்கம் பார்க்க)

Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE

Phone : 416-289-9229

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# இலங்கைக்கு கடன் வழங்க வடக்கு கிழக்கில் தனது ஆதிக்கத்தை உறுதி செய்வது உட்பட இந்தியா கடும் நிபந்தனைகள் விதிப்பு!

இலங்கைக்கு இந்தியா கொள்கையளவில் உத்தரவாதமளித்த ஒரு பில்லியன் டொலர் கடன் தொகை இலங்கை அரசாங்கம் உத்தரவாதங்களை அளிக்கின்ற வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது



இலங்கைக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதற்கு இந்தியா கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை தனது பொருளாதார நெருக்கடியை எவ்வாறு நீண்டகால அடிப்படையிலும் குறுகிய கால அடிப்படையிலும் கையாளப்போகின்றது என்பது குறித்த திட்டமொன்றை முன் வைக்குமாறு இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் வடக்கு கிழக்கில் இந்தியா நீண்டகாலமாக முன்னெடுக்க விரும்பும் அபிவிருத்தி திட்டங்களிற்கான தடைகளை நீக்கவேண்டும் எனவும் இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை இது குறித்த உறுதிமொழியை வழங்கும் வரை இந்தியா இந்த உதவியை வழங்குவது நிச்சயமற்றதாக காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த டிசம்பரில் இந்தியாவிடமிருந்து 500 மில்லியன் டொலர் கடன் உதவியை பெற்ற நிதியமைச்சர் பசில் ராஜபக்ச அத்தியாவசிய பொருட்கள் எரிபொருட்களை பெற்றுக் கொள்வதற்காக இந்தியாவிடமிருந்து ஒரு பில்லியன் டொலர்களை பெற்றுக் கொள்வதற்காக இந்தியாவிற்கு மேற்கொள்ளவிருந்த பயணம் இரண்டு தடவை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. டிசம்பரில் பெற்றுக் கொண்ட கடனை இந்தமாதம் இலங்கை மீள செலுத்தவுள்ளளது. இலங்கை எதிர்கொண்டுள்ள அந்நிய செலாவணி மற்றும் கடன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான நீண்டகால திட்டம், மற்றும் இலங்கையில் இந்தியா ஆரம்பிக்க விரும்பும் பொருளாதார திட்டங்கள் குறித்த பட்டியல் ஆகியவற்றிற்கான பச்சைக்கொடியை இந்தியா அரசாங்கம் எதிர்பார்க்கின்றது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவோ இலங்கையோ இதுவரை இது குறித்து உத்தியோகபூ ர்வமாக எதனையும் தெரிவிக்கவில்லை. இந்தியாவின் கோரிக்கைகள் திருகோணமலை துறைமுகத்தை சுற்றி இந்தியாவின் மூலோபாய நலன்களை உறுதி செய்யும் கடல்சார் பாதுகாப்பு ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக இந்தியாவின் கோரிக்கைகள் காணப்படுகின்றன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு டோனியர் கண்காணிப்பு விமானங்களை வழங்குவது திருகோணமலையில் இலங்கை கடற்படைக்கு கப்பல் பழுதுபார்க்கும் தளத்தை வழங்குவது ஆகிய வேண்டுகோள்களையும் இந்தியா விடுத்துள்ளது.

மேலும் குருகிராமில் உள்ள இந்திய கடற்படையின் இந்திய பெருங்கடலிற்கான தகவல் இணைப்பு மையத்திற்கு கடற்படை தொடர்பு அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

குருகிராமில் உள்ள இந்த நிலையம் வர்த்தக கப்பல்களையும் கடல்சார் பயங்கரவாதம் கடல் கொள்ளை போன்றவற்றையும் கண்காணிக்கின்றது.

இலங்கை அதிகாரி பத்துநாடுகளின் அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவார்

இந்திய அரசாங்கத்தின் முக்கிய வேண்டுகோள்களில் ஒன்றாக திருகோணமலை அதனை சுற்றியுள்ள சம்பூ ர் பகுதிகளில் புதுப்பிக்கதக்க எரிசக்தி (solar) திட்டத்தை தொடங்குவது காணப்படுகின்றது. இந்திய அரசாங்கத்தின் முக்கிய அழுத்தங்களில் ஒன்றாக இது காணப்படுகின்றது. ஜப்பானுடன் இணைந்து குறிப்பிட்ட பகுதியில் நிலக்கரிசக்தி திட்டத்தை முன்னெடுக்கும் இந்தியாவின் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. தனது எதிர்கால மின்சக்தி திட்டங்களிற்கு நிலக்கரியை பயன்படுத்துவதில்லை என இலங்கை அறிவித்துள்ளதை தொடர்ந்து இந்த திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலையத்தினை வர்த்தக நடவடிக்கைகளிற்காக திறப்பது மற்றும் யாழ் குடாநாட்டில் பல்வேறு கலாச்சார திட்டங்கள் போன்றவற்றை இந்தியா ஏற்கனவே அறிவித்துள்ளது.

நெடுந்தீவில் புதுப்பித்தக்க எரிசக்தி துறையில்) முதலீடு செய்வதற்கு இந்தியா விரும்புகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கேள்விப்பத்திர முறை மூலம் சீன நிறுவனம் இதற்கான அனுமதியை பெற்றது எனினும் இந்தியா இந்த திட்டத்தை இரத்துச் செய்ய வைத்துள்ளது.

இலங்கைக்கு இந்தியா கொள்கையளில் உத்தரவாதமளித்த ஒரு பில்லியன் டொலர் கடன் தொகை இலங்கை அரசாங்கம் உத்தரவாதங்களை அளிக்கின்ற வரை இடை நிறுத்தப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.

ஒரு பில்லியன் டொலர் கடனிற்காக இலங்கை நிதியமைச்சர் பசில் ராஜபக்ச இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்வார் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாததால் அந்த விஜயம் குறித்து உத்தியோகபூ ர்வமாக கருத்து கூறுவதற்கு இந்திய தூதரகம் மறுத்துள்ளது என சண்டேடைம்ஸ் தெரிவித்துள்ளது.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் ஒலித்த சர்வதேச நாடுகளின் குரல்கள்




பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் சமீபத்தில் பிணையில் விடுதலை செய்யப்பட்டதை வரவேற்கின்றோம். மேலும் விடுதலைகளை ஊக்குவிக்கின்றோம்.

சிவில் சமூக அமைப்புகளை தொடரந்து கண்காணிப்பதையும் அச்சுறுத்துவதையும் கண்டிக்கின்றோம் என மனித உரிமை பேரவையில் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி தெரிவித்துள்ளார்




முன்னைய மனித உரிமை மீறல்களிற்கு பொறுப்புக்கூறல் இன்மை ஜனநாயக ஸ்தாபனங்கள் நீதித்துறையின் சுதந்திரம் இல்லாமல் போதல் குறித்து மனித உரிமை பேரவையில் நெதர்லாந்து கவலை தெரிவித்துள்ளது.




இலங்கை மக்கள் சிறந்த முறையில் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக இலங்கை ஐநாவிற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் மனித உரிமை பேரவையில் பிரான்ஸ் தூதுவர் தெரிவித்துள்ளார்.





சிவில்சமூகத்தினர் மீதான கண்காணிப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் தன்னிச்சையான கைது நடவடிக்கைகளை இலங்கை முடிவிற்கு கொண்டு வர வேண்டும் என நோர்வே வேண்டுகோள் விடுத்துள்ளது.

நிலைமாற்றுக்காலை நீதி பொறுப்புக்கூறல் நல்லிணக்க போன்ற விடயங்களில் போதியவு முன்னேற்றமில்லாதது குறித்து கவலையடைந்துள்ளோம் என நோர்வே தெரிவித்துள்ளது



காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகம் காணாமல் போனவர்கள் குறித்து மிகவும் மந்த கதியில் விசாரணைகளை முன்னெடுப்பது குறித்து பிரிட்டன் கவலை வெளியிடடுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்திற்கான உத்தேச திருத்தங்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவை நீண்டகால கரிசனைகள் தொடர்ந்தும் நீடிக்கின்றன என பிரிட்டன் தெரிவித்துள்ளது.



பயங்கரவாத தடைச்சட்டத்தை சர்வதேச தராதரங்களிற்கு ஏற்ப உருவாக்குவதற்கு மேலும் முழுமையான அவசர சீர்திருத்தங்கள் அவசியம் என ஜேர்மனி தெரிவித்துள்ளது. சிவில் சமூகம் சுதந்திரமாக பாதுகாப்பாக செயற்பட அனுமதிப்பது குறித்தும் ஜேர்மனி தெரிவித்துள்ளது.

## சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கை

AMNESTY INTERNATIONAL

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் செயற்திறனான முறையில் இயங்கி வருவதாக சர்வதேசத்திற்குக் காண்பிக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான அரசாங்கத்தின் பிரதிபலிப்பு, உண்மை நிலரவத்துடன் ஒப்பிடுகையில் சர்வதேச சமூகத்திற்குக் கூறப்படும் விடயங்கள் பொய்யானவை என்றும் அச்சபை குற்றம் சாட்டியுள்ளது.

அனைத்து நடவடிக்கைகளும் சரியான முறையில் இடம்பெறுகின்றன என்பதை மனித உரிமைகள் பேரவைக்கும் ஏனைய உறுப்பு நாடுகளுக்கும் காண்பிக்க வேண்டும் என்பதில் இலங்கை அரசாங்கம் தெளிவாக இருக்கின்றது என்றும் அச்சபை சாடியுள்ளது.

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னமும் நீதி வழங்கப்படவில்லை என தெரிவித்து ஆவணப்படுத்தல் வடிவிலான அறிக்கையொன்றை சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ளது. காணாமலாக்கப்படல் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களிடம் நடத்தப்பட்ட நேர்காணல்கள் மற்றும் முதலாம், இரண்டாம் கட்ட ஆய்வுகளின் மூலம் திரட்டப்பட்ட தகவல்களைக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிற்கு அடுத்ததாக உலகிலேயே அதிகளவான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் பதிவான இரண்டாவது நாடு இலங்கை என்றும் இதுவரை 6,259 வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் பதிவாகியிருப்பதாகவும் சர்வதேச மன்னிப்புச்சபை குறிப்பிட்டுள்ளது. எனினும் இலங்கையில் கடந்த 1980 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தபட்சம் 60 ஆயிரம் அல்லது ஒரு இலட்சம் வரையிலான வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றிருக்கக்கூடும் என்று தாம் மதிப்பிட்டுள்ளதாகவும் அச்சபை சுட்டிக் காட்டியுள்ளது.

## மனிதஉரிமை கண்காணிப்பகம் அறிக்கை



இலங்கையில் மனித உரிமைகளை மீறி செயற்படுவோருக்கு எதிராக உலக நாடுகள் தடைகளை விதிக்கவேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் விடயத்தில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்ற நிலையில், ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் ஆணையாளரின் அறிக்கை முரணாக காணப்படுவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்மையான முன்னேற்றத்துக்கு உலக நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி தெரிவித்துள்ளார்.

தமக்கான நீதி, பொறுப்புக்கூறல் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பலவீனமானவர்கள் ஐக்கிய நாடுகளையும் சர்வதேசத்தையுமே நம்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ஸ்ரீலங்கா அரசாங்கம் நிராகரிப்பு

ஐ.நா மனித உரிமைகள் சபையில் 2021 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 46-1 தீர்மானத்தை தாம் நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் சபையின் 49 ஆவது கூட்டத் தொடரில் தெரிவித்துள்ளார்.

அந்த பிரேரணையில் 6 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சியங்களைச் சேகரிக்கும் விடயத்தை கடுமையாக எதிர்ப்பதாகவும் அவர் குறிப் பிட்டார். ஆதாரமற்ற விடயங்களை உள்ளடக்கி 46-1 பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளமையால் அதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக வெளிவிவ கார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தனது உரையில் கூறினார்.


LAW OFFICE of THELMA WILLIAMS

Barrister, Solicitor, Notary Public, Commissioner (ON)
LL.B (Sri Lanka)

- FAMILY LAW:
  - Divorce
  - Separation
  - Property Division
- REAL ESTATE
- WILLS and ESTATES
- EMPLOYMENT LAW
  - ODSP, CPP disability
  - Wrongful Dismissal
  - Long-term Disability
- ADMINISTRATIVE LAW
- POWERS OF ATTORNEY, AFFIDAVITS, STATUTORY DECLARATIONS

- விவாகரத்து, சட்டப்படி பிரிதல், சொத்துக்களை பிரித்தல் போன்ற குடும்ப வழக்குகள்,
- காணி, வீடு வாங்குதல், விற்றல் தொடர்பான சட்டங்கள்
- உயில் மற்றும் எஸ்ரேற்ஸ்
- தொழில்சார் சட்டம்
- நிர்வாக சட்டம்
- சட்ட ஆவணங்களை உருவாக்குதல்

கனேடிய சட்டத்துறையில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்ட வல்லுனர்களின் நம்பிக்கையும், உத்தரவாதமுமான சேவை

Quality, Dependable Service with many years of Canadian legal experience.

TEL:647-777-8424
Suite #300, 10 Milner Business Court,
Scarborough, Ontario M1B 3C6
(just 2 minutes north of HWY 401)

PLEASE CALL FOR AN APPOINTMENT



Basement for Rent
Mccowan & Mcnical
1 Room apartment for Rent
(perfer couples or small family)
call: 647 459 0097

# பொறுப்புக்கூறல் - நல்லிணக்க செயற்பாடுகளில் இலங்கை பின்னடைவு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படாத கலாச்சாரம் நீடிக்கிறது! ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கடும் கவலை!

இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை சர்வதேச உபாய முறைகளை தொடர்ச்சியாக பயன் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லெட் தெரிவித்தார்.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாட்டைப் பொறுத்த வரையில் கடந்த வருடம் மிகவும் பின்னடைவு மிக்கதாகவே காணப்படுகின்றது. பாதிக் கப்பட்ட மக்கள் தொடர்ச்சியாக தமது நீதிக்காக போராடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அது மறு க்கப்படுகின்றது. நம்பிக்கை, உண்மை மற்றும் நீதி தொடர்ச்சியாக மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கடந்த வெள்ளிக்கிழமை (4) நடைபெற்ற இலங்கை தொடர் பான விவாதத்தில் தனது எழுத்து மூலமான அறிக் கையை வெளியிட்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் இலங்கை தொடர்பான அறிக்கையை உத்தியோகபூர்வ மாக வெளியிட்டு உரை யாற்றுகையில், இலங்கையில் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படாத கலா சாரம் நீடித்துக் கொண்டிருக்கின்றது.

அதனை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க ப்பட வேண்டும். அத்துடன் வன்முறைகள் இடம் பெறாத வகையில் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போன்று இலங்கையில் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நீதியை வழங்குவது தொடர்பில் உண ரக்கூடிய வகையிலான செயற்பாடுகள் இடம் பெறாத நிலைமை நீடித்துக் கொண்டிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்து வதற்காக சர்வதேச உபாய முறைகளை தொடர்ச்சியாக



பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை, இலங்கையில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படு கின்றன. மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையுடன் இலங்கை இணைந்து செயற்பட முன் வந்துள்ளமை, மறுசீரமைப்புக்கான சில நடவடிக்கை கள் எடுக்கப்பட்டுள்ளமை என்பனவற்றை நாங்கள் அங்கீகரிக்கின்றோம். எப்படியிருப்பினும் இலங்கையில் சுயாதீன நீதித்துறையை பலப்படுத்த வேண்டும்.


இராணுவத்தில் தங்கியிருத்தல் தவிர்க்கப்பட வேண்டும். வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்றாக மாற்றி அமைக்க வேண்டியது அவசியமாகும். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட சிலரை விடுவித்துள்ளமை அந்தச் சட்டத்தை திருத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப் பட்டு இருக்கின்றமை வரவேற்கப்பட வேண்டிய விடயங்களாகும். ஆனால் பயங்கரவாத தடைச்சட்ட த்தில் காணப்படுகின்ற சில அடிப்படை விடயங்கள் தொடர்பாக அரசாங்கம் ஆராய்வது மிக அவசிய மாகும்.

இலங்கையின் பாதுகாப்புத்துறை தொடர்பான மறுதீரமைப்புக்கள் மிக முக்கியத்துவம் மிக்கதாக காணப்படுகின்றது. பொறுப்புக்கூறல் மற்றும் நல்லி ணக்க செயற்பாட்டை பொறுத்தவரையில் கடந்த வருடம் மிகவும் பின்னடைவு மிக்கதாகவே காணப் படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ச்சியாக தமது நீதிக்காக போராடிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அது மறுக்க ப்படுகின்றது. நம்பிக்கை, உண்மை மற்றும் நீதி தொடர்ச்சியாக மறுக்கப்பட்டக்கொண்டிருக்கின்றது. இராணுவ அதிகாரிகளின் கைகளில் சிவில் நிர்வாகப் பதவிகள் குவிந்து கிடப்பது கண்டு நான் ஆழ்ந்த கவலையுடன் இருக்கின்றேன். அவ்வாறு நியமிக்கப் பட்டுள்ளவர்களில் சிலர் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்களுக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் கடந்த கால மீறல்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதிப் படுத்துவதற்கும் அவசியமான, ஆழமான, நீதிஸ்தாபன மற்றும் பாதுகாப்புத்துறை சீர் திருத்தங்களை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.


சிவில் சமூக அமைப்புக்கள், மனித உரிமை பாது காவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பொலிஸார், புலனாய்வுப்பிரிவினரால் துன்புறுத்தப்படுவதும் அச்சு றுத்தப்படுவதுமாக வெளியாகும் தகவல்கள் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன் என்றார்.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்
கனடா - அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)
Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

15 மார்ச் 2022 செவ்வாய்க்கிழமை
பிரதோஷ விரதம்

18 மார்ச் 2022 வெள்ளிக்கிழமை
பங்குனி உத்தரம்
உபயம்:-
ச.நிருஜன், தனுஷன், ஈஸ்வர்

02 ஏப்ரல் 2022 சனிக்கிழமை
கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் 10வது வருடாந்த மகோற்சவம் ஆரம்பம்

பங்குனி உத்தரத் தினத்தன்று பால் குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

21 பெப் 2022 முதல் இரவுப் பூஜை
மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

இவ்வண்ணம்:- ஆலய தர்மகர்த்தா சபையினர்

# தமிழ் - முஸ்லிம் கட்சிகள் சிவில் அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுமாறு அமெரிக்கா வலியுறுத்தல்

இலங்கையில் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய அரசியல் தீர்வொன்றை அடைந்துகொள்வதை முன்னிறுத்தி அரசாங்கம் தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளுடனும் சிவில் சமூக அமைப்புக்களுடனும் ஒன்றிணைந்து செயற்படவேண்டியது அவசியமாகும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத் தொடரில் இலங்கையின் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் நிலைவரம் தொடர்பான எழுத்துமூல அறிக்கை உயர்ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட்டினால் கடந்த வெள்ளிக்கிழமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இலங்கை மீதான விவாதத்தில் பல்வேறு நாடுகள் கலந்து கொண்டு உரையாற்றியிருந்த நிலையில் இலங்கை தொடர்பான விவாதத்தின் இரண்டாம்நாள் அமர்வு 07 மார்ச் 2022 திங்கட்கிழமை ஜெனிவா நேரப்படி காலை 9 மணிக்கு நடைபெற்றது.



அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமெரிக்காவின் பிரதிநிதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது, இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான முன்மொழிவுகளை வெளியிட்டிருப்பதுடன் அச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 40 இற்கும் அதிகமானோர் விடுதலை செய்யப்பட்டமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

அது மாத்திரமன்றி சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் தொடர்புகளைப் பேணுவதற்கும் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கும் மேற்கொள்ளப் பட்டிருக்கக்கூடிய நகர்வுகளும் முயற்சிகளும் பாராட்டுக்குரியவையாகும். இவ்விடயத்தில் மேலும் முன்னேற்றகரமான நகர்வுகள் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். அதேவேளை பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச பிரகடனங்களுக்கு அமைவாகத் திருத்தியமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அடுத்ததாக சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மீதான பாதுகாப்புத் தரப்பினரின் கண்காணிப்புக்கள் மற்றும் அடக்குமுறைகள் தொடர்கின்றன.

கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிக்க வேண்டிய அதேவேளை, சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர் மீதான அடக்குமுறைகளை அரசாங்கம் முடிவிற்குக் கொண்டு வரவேண்டும்.

மேலும் நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதற்கு காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியவற்றின் செயற்பாடுகள் செயற்திறன் மிக்கவையாகவும் வெளிப்படைத்தன்மை வாய்ந்தவையாகவும் சுயாதீனமானவையாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியவையாக அமைய வேண்டியது அவசியமாகும்.

அத்தோடு அனைவரையும் உள்ளடக்கிய அரசியல் தீர்வை அடைந்துகொள்வதை முன்னிறுத்தி தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளுடனும் சிவில் சமூக அமைப்புக்களுடனும் ஒன்றிணைந்து செயற்படுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் என்றார்.

# தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெற்றி கொள்வதில் அமெரிக்காவின் முழுமையான ஒத்துழைப்பு கிடைக்கும்!

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு!

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெற்றி கொள்வதில் அமெரிக்காவின் முழுமையான ஒத்துழைப்பும் உதவிகளும் கிடைக்கும் எனவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரங்களில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் விதமாக எதிர்வரும் செப்டெம்பரில் கொண்டு வரும் விரிவான அறிக்கையை அமெரிக்கா முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கும் எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்புடனான சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எ.சுமந்திரன் ஆகியோருடன் 08 மார்ச் 2022 செவ்வாய்க்கிழமை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் கலந்துரையாடியிருந்தார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனின் இல்லத்தில் செவ்வாய்க்கிழமை காலை இந்த சந்திப்பு இடம்பெற்றிருந்தது. இந்த சந்திப்பின் போது, அரசியல் தீர்வு விடயங்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மீண்டும் அமெரிக்கா அங்கம் பெற்றுள்ள நிலையில் அதன் மூலமாக முன்னெடுக்கக்கூடிய விடயங்கள், அரசியல் அமைப்பு உருவாக்கும் ஆகிய விடயங்கள் குறித்தே முக்கியத்துவம் கொடுத்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் நீண்ட காலமாக வாக்குறுதிகள் மீறப்பட்டுவருகின்றது, அரசியல் அமைப்பு ரீதியில் ஒரு சில விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ள போதிலும் முழுமையான அரசியல் தீர்வொன்று இல்லை.

தொடர்ச்சியாக ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் இந்த விடயங்கள் குறித்து பேசுவதுடன் முடிந்து விடுகின்றது. தற்போது புதிய அரசாங்கம் ஆட்சியில் உள்ள நிலையில் தமிழ் மக்களின் தீர்வு விடயங்களில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அதனை நிறைவேற்றும் எந்தவொரு முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் முன்னெடுப்பதாக தெரியவில்லை. எனவே சர்வதேச நாடுகளின் மூலமாக எமக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே இப்போதும் நாம் கொண்டுள்ள நிலைப்பாடு என்பதையும், எனவே அரசியல் தீர்வு விடயத்தில் அமெரிக்காவின் கூடுதல் அழுத்தம் இருக்கவேண்டும்.

தொடர்ச்சியாக அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தேனும் இலக்குகளை அடைய ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதை சம்பந்தன் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், புதிய அரசியல் அமைப்பு உருவாக்க விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்க ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் இதுவரை குறித்த சந்திப்புகள் இடம்பெறவில்லை என்பதையும், இறுதியாக சில மாதங்களுக்கு முன்னர் ஒரு பேச்சுவார்த்தை ஏற்பாடு செய்யப்பட்டு இறுதி நேரத்தில் பேச்சுவார்த்தைகள் இரத்தானது குறித்தும் சுமந்திரன் எம்.பி சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இடம் பெற்றுக் கொண்டுள்ளது, அமெரிக்கா மீண்டும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில்அமெரிக்கா அங்கம் வகிக்கின்றமை திருப்தியளிக்




கின்றது.

அதே போல் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதால் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக அமெரிக்கா தீர்மானம் எடுக்க வேண்டும் எனவும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் கருத்துக்களை கேட்டறிந்து கொண்ட இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெற்றிகொள்வதில் அமெரிக்காவின் முழுமையான ஒத்துழைப்பும் உதவிகளும் கிடைக்கும் எனவும், அதேபோல் அரசியல் தீர்வு விடயங்களிலும், புதிய அரசியல் அமைப்பு உருவாக்க விடயத்திலும் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்போம் எனவும் கூறியுள்ளதுடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரங்களில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் விதமாக அதற்கான அழுத்தங்களை முன் வைப்பதுடன் எதிர்வரும் செப்டெம்பரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரும் விரிவான தீர்மானத்தின் போது அதனை நிறைவேற்றிக்கொள்ள அமெரிக்கா முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கும் எனவும் கூட்டமைப்பிடம் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவதற்கான ஆயுதமாக மனித உரிமைகளைப் பயன்படுத்த வேண்டாம் சீனா



இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையீடு செய்வதற்கான ஓர் ஆயுதமாக மனித உரிமைகளைப் பயன்படுத்துவதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று சீனா பேரவையில் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் நிலைவரம் தொடர்பான எழுத்து மூல அறிக்கை உயர்ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட்டினால் கடந்த வெள்ளிக்கிழமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இலங்கை மீதான விவாதத்தில் பல்வேறு நாடுகள் கலந்து கொண்டு உரையாற்றியிருந்த நிலையில் இலங்கை தொடர்பான விவாதத்தின் இரண்டாம்நாள் அமர்வு 07 மார்ச் 2022 திங்கட்கிழமை ஜெனிவா நேரப்படி காலை 9 மணிக்கு நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சீனாவின் பிரதிநிதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

(20ம் பக்கம் பார்க்க)

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.


தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

05 மார்ச் 2022 முதல் 11 மார்ச் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு விசேந்தி அருளானந்தம்

யாழ்.சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் ஆசிரியர் திரு விசேந்தி அருளானந்தம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாள் 11 மார்ச் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு விசேந்தி அருளானந்தம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தாமு சோமசுந்தரம்

தும்பலை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தாமு சோமசுந்தரம் (மெக்கானிக்) அவர்களுடைய 2வது ஆண்டு நினைவு நாள் 10 மார்ச் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தாமு சோமசுந்தரம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 23வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மார்க்கண்டு மனோன்மணி
### திரு செல்லர் மார்க்கண்டு

யாழ்ப்பாணம் சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு மனோன்மணி அவர்களது 23வது ஆண்டு நினைவு நாள் 10 மார்ச் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் தந்தையாரது நினைவையும் சேர்த்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். தாய், தந்தையரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி ஜெசிமேரி யோசப்பின் எற்வேட்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் ரொறன்ரோ கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஜெசிமேரி யோசப்பின் எற்வேட் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 06 மார்ச் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி ஜெசிமேரி யோசப்பின் எற்வேட் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி

நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது 10வது ஆண்டு நினைவு நாள் 14 மார்ச் 2022 திங்கட் கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பத்தினிஅம்மா வைத்தியநாதன்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருவையாறு வட்டக்கச்சி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்தினி அம்மா வைத்தியநாதன் அவர்களின் ஏழாவது ஆண்டு நினைவு நாள் 14 மார்ச் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பத்தினிஅம்மா வைத்தியநாதன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்ட வனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சுகிர்தலெட்சுமி இராஜரெத்தினம்

யாழ்ப்பாணம் தாவடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சுகிர்தலெட்சுமி இராஜரெத்தினம் அவர்களுடைய 30வது ஆண்டு நினைவு நாள் 01 பெப்ரவரி 2022 ஆகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 07 மார்ச் 2022 திங்கட்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சுகிர்தலெட்சுமி இராஜரெத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



05 மார்ச் 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு கண்ணன் இலங்கைநாயகம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கண்ணன் இலங்கைநாயகம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



05 மார்ச் 2022 சனிக்கிழமை கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு அருமைராஜா அப்பாத்துரை அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



06 மார்ச் 2022 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் ரொறன்ரோ கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஜெசிமேரி யோசப்பின் எற்வேட் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



01 பெப்ரவரி 2022 செவ்வாய்க்கிழமை தாவடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சுகிர்தலெட்சுமி இராஜரெத்தினம் அவர்களுடைய 30வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 07 மார்ச் 2022 திங்கட்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



08 மார்ச் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தர்மசீலன் அர்ச்சனா இணையர்கள் தமது பிள்ளைகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



10 மார்ச் 2022 வியாழக்கிழமை தம்பலை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தாமு சோமசுந்தரம் (மெக்கானிக்) அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



10 மார்ச் 2022 வியாழக்கிழமை யாழ்.சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி மனோன்மணி மார்க்கண்டு அவர்களது 23வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அவரது துணைவர் திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது நினைவையும் சேர்த்து அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



11 மார்ச் 2022 வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி சர்வானந்தசிவம் மீனாவதி அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



11 மார்ச் 2022 வெள்ளிக்கிழமை யாழ்.சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிரிந்த திரு. விசேந்தி அருளானந்தம் அவர்களது 2வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

**Toronto thiruchendur murugan temple** **ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்**

19 Penn Dr, North York, ON M9L 2A6. 416 744 9568
www.ttmtemple.com - Email: info@ttmtemple.com

**ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலய மகாசபை கூட்டம் பற்றிய அறிவித்தல்**

24/02/2022

ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலய நிரந்தர அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருவது.

எமது ஆலய பொதுக்கூட்டம் எதிர் வரும் சித்திரை மாதம் 17/04/2022 ஞாயிற்றுக்கிழமை பிறப்பகல் 3.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அன்றைகூட்டத்தில்

- ✔ வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தல்
- ✔ ஆலய அடைமானக்கடனை திரும்ப செலுத்துவற்கான பொறுப்பேற்றல்
- ✔ எதிர் வருங்காலங்களில் புனரமைப்பு பணிகள் பற்றிய கலந்துரையாடல்
- ✔ புதிய நிர்வாகசபை தேர்வு
- ✔ உப நிர்வாகசபை தேர்வு

என்பன இடம் பெறும்

அங்கத்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும் என்பதால் இதுவரை அங்கத்தவர்கள் ஆகாதவர்கள் ஆலய காரியாலயத்தில் தொடர்பு கொண்டு உங்களுடைய பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முக்கிய குறிப்பு**
அங்கத்துவம் தனிநபருக்கானதே தவிர குடும்பத்தினருக்கானது அல்ல ஒரு அங்கத்துவ கட்டணம் தனி ஒரு நபருக்கானதே என்பதனையும் அறியத்தருகின்றோம்

மகாத்மநாதன் கதிர்காமநாதன்
செயலாளர்
ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்

24/02/2022

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.


## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# Amma Pawn Broker
## அம்மா தங்கநகை அடைவு மாடம்

கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

1.0% முதல் 1.5% வரை

அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com

416-757-0034
416-994-3861



# TAX CENTRIC

**2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1**

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு
அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph




- Personal Tax
- Corporate Tax
- Book Keeping & Accounting
- Payroll Services
- GST/HST Filing
- Corporate Services
- Business Startup
- Financial Planning

## Gayatiri Thavan

Tel: **289.569.0169** • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
**www.taxcentric.ca**





Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Insurance Advisor
Life and Living Benefits

RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
Scarborough, ON M1V 1V2
Mahindan.mailvaganam@rbc.com

Cell: 416-262-4973

**Insurance can seems confusing**
**It doesn't have to be.**

*We'll help you get it.*

**Talk to an RBC Insurance advisor in your neighbourhood today**

*We take the time to make choosing the right insurance plan less confusing for you. Whether it's life, health, car, home, travel or wealth, we'll help you to choose the right coverage to protect what's important to you.*

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம்
அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால்
பெரும்பாலும் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance®
Life | Health | Auto | Home | Travel | Wealth

# உங்கள் சகல மோட்கேஜ் தேவைகளுக்கும் அழையுங்கள்...



* 1st time Home Buyers
* 2nd and 3rd Mortgages
* Refinancing
* Home Equity Line of Credit
* Good Credit/Bad Credit

**NO PROBLEM**

GREATER TORONTO MORTGAGES

**Janaki Jeyathevan**
*(Mortgage Specialist - Lic. No.: M19002242)*

Dir: **647-624-3415**
Email: mortgageapprovalstoday@gmail.com

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# ஐ.நா.வுக்கு கடிதம் எழுதிய தமிழ்க்கட்சிகள்!

கடந்த ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி கூட்டாகக் கடிதம் அனுப்பிய கட்சிகள் இம்முறை ஐநாவுக்கு தனித்தனியாகவும் கூட்டாகவும் கடிதங்களை அனுப்பியுள்ளன. கடந்த ஆண்டு அனுப்பிய கடிதத்தின் விளைவாக என்ன நடந்தது? அக்கூட்டுக் கடிதத்தில் பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்று மூன்று கட்சிகளும் கேட்டிருந்தன. கடந்த ஓராண்டு காலப் பகுதிக்குள் அவ்வாறு பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகும் விடயத்தில் உண்மையாக உழைத்த கட்சி எது? இதுவிடயத்தில் தமிழ்க் கட்சிகள் முதலில் தமது மக்களுக்கு பொறுப்புக்கூறுமா?

உக்ரைன் விவகாரம் மீண்டும் ஒரு தடவை ஐநாவின் கையாலாகாத்தனத்தை நிரூபித்துக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் ஏற்கனவே ஐநாவின் கையாலாகாத்தனத்தால் கைவிடப்பட்ட ஈழத்தமிழர்கள் ஐநாவை நோக்கி சலிப்பின்றி கடிதங்களை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இம்முறை கூட்டமைப்பு தனியாக ஒரு கடிதம், தமிழ் தேசிய மக்கள் முன்னணி தனியாக ஒரு கடிதம், ஐந்து கட்சிகளின் கூட்டு தனியாக ஒரு கடிதம், என்று மூன்று முக்கிய கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

இதில் சம்பந்தர் கையெழுத்திட்ட கடிதம் ஏனைய கட்சிகள் எல்லாவற்றுக்கும் முதலில் அனுப்பப்பட்டு விட்டது. அக்கடிதம் ஊடகங்களிலும் வெளி வந்திருந்தது. ஆனால் கடந்த திங்கட்கிழமை 5 கட்சிகள் இணைந்து ஐநாவுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கின்றன. அக்கடிதத்தில் ஒரு பொது வாக்கெடுப்புக்கான கோரிக்கையும் காணப்படுகிறது. கூட்டமைப்பு அனுப்பிய கடிதத்தில் அவ்வாறான கோரிக்கைகள் எவையும் கிடையாது.

ஆனால் மேற் கண்ட கடிதத்தை அனுப்பிய ஐந்து கட்சிகளில் இரண்டு இப்பொழுதும் கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கின்றன. கடந்த செப்டம்பர் மாத ஐநா கூட்டத்தொடரை முன்னிட்டும் அவை இவ்வாறு ஒரு கூட்டுக் கடிதத்தை அனுப்பின. அக்கடிதத்தை வரையும் முயற்சிகளை தொடக்கத்தில் ஆதரித்த மாவை சேனாதிராஜா கடைசி வேளையில் அதில் கையெழுத்து வைப்பதை தவிர்த்து விட்டார். அதேசமயம் ஏனைய கட்சிகள் தமிழரசுக் கட்சிக்காக காத்துக் கொண்டிராமல் ஒரு கடிதத்தை கூட்டாக அனுப்பி வைத்தன. அது அப்பொழுது ஒரு சர்ச்சையாக எழுந்தது. கூட்டமைப்பு இரண்டாக உடையப் போகிறதா என்ற கேள்விகளையும் எழுப்பியது. எனினும் சம்பந்தர் நிலைமைகளை ஒருவாறு சமாளித்து கூட்டமைப்பை பாதுகாத்தார்.

இப்பொழுது மறுபடியும் அதே பிரச்சினை. முன்பு நடந்தது போலவே இந்த முறையும் மாவை சேனாதிராஜா ஐந்து கட்சிகளின் முயற்சிகளில் ஒத்துழைத்ததாகத் தெரிய வருகிறது. ஆனால் அவர் கடிதத்தில் கையெழுத்திடவில்லை. அதேசமயம் சம்பந்தர் கூட்டமைப்பின் சார்பாக ஒரு கடிதத்தை தயாரித்த போது அதில் பங்காளி கட்சிகளின் பங்களிப்பை கேட்டதாக ஒரு செய்தி வெளிவந்தது. முதல் வரைபை வரைந்த பின் அதை பங்காளிக் கட்சித் தலைவர்களிடம் அனுப்பி அவர்களுடைய கருத்துக்களையும் பெற்றுக் கொண்டு இறுதி வரைபை தயாரித்து ஐநாவுக்கும் அனுப்புவது என்று சம்பந்தர் சிந்தித்ததாக கூறப்படுகிறது. ஆனால் பங்காளிக் கட்சிகளைக் கேட்டால் அவர்கள் வேறுவிதமாக கூறுகிறார்கள். சம்பந்தர் கூட்டமைப்பின் தலைவர் எழுதுவதாக ஒரு கடிதத்தை எழுதி விட்டு அதைத் தமது பார்வைக்கு அனுப்பியதாகவும், அது பங்காளிக் கட்சித் தலைவர்கள் கையொப்பம் வைப்பதற்கான ஒரு கடிதம் அல்லவென்றும் கூறுகிறார்கள்.



தமிழ் மக்கள் மத்தியில் உள்ள ஒரே கூட்டுக்குள் இருந்து இருவேறு கடிதங்கள் அனுப்பப்படுவது என்பது கூட்டமைப்பு ஒரு இறுக்கமான கூட்டாக இல்லை என்பதைத்தான் காட்டுகிறது. இந்தியாவுக்கு கடிதம் எழுதும் விடயத்திலும் முதலில் ஒத்துழைக்காத தமிழரசுக் கட்சி கடைசிக் கட்டத்தில் ஒத்துழைத்தது. ஆனால் ஒன்றாகக் கடிதம் எழுதிவிட்டு தனியாக சம்பந்தரும் சுமந்திரனும் இந்தியத் தூதுவரை கொழும்பில் சந்தித்திருக்கிறார்கள். மேலும் ஒரு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்போடு இணைந்து தமிழரசுக் கட்சி தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு கடிதம் எழுதியிருக்கிறது. இது தவிர பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான கையெழுத்து போராட்டத்தை தமிழரசுக் கட்சி தனியாக முன்னெடுக்கின்றது.

அதாவது ஒரே கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சி தனியாக ஓடுகிறது. ஏனைய கட்சிகள் கூட்டமைப்பில் இருந்து பிரிந்த கட்சிகளோடு இணைந்து வேறு ஒரு தனியோட்டம் ஓடுகின்றன. அதேசமயம் கூட்டமைப்பு என்ற பெயரிலும் கடிதம் அனுப்பப்படுகிறது. இது எதனைக் காட்டுகிறது? கூட்டமைப்பின் தலைமை இறுக்கமாக இல்லை என்பதைத்தானே? பங்காளிக் கட்சிகள் தனியோட்டம் ஓடும்போது அதனைத் தடுத்து கூட்டமைப்பின் கட்டுக்கோப்பைப் பேண ஏன் சம்பந்தரால் முடியவில்லை?

அவர் உடல் ரீதியாக மற்றவர்களில் தங்கியிருக்கும் ஒருவராக மாறி விட்டார். கூட்டமைப்பு அவருடைய முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பதைத் தான் கடந்த ஓராண்டுக்கு மேலான நிலைமை நமக்கு உணர்த்துகிறது.தலைமை இருக்கத்தக்கதாக ஏனைய முக்கியஸ்தர்கள் கருத்துக் கூறுவதும் தலைமைக்கு எதிராக பகிரங்கமாக கருத்துக் கூறுவதும் பங்காளிக் கட்சிகள் வெளியில் உள்ள கட்சிகளோடு இணைந்து ஒரு கூட்டுக்குப் போவதும் கடிதங்களை அனுப்புவதும் அதைத் தான் நமக்கு உணர்த்துகின்றன.

ஆம். தமிழ் மக்களுடைய அரசியலில் அண்மைக்காலமாக ஏற்படும் குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் பிரதான காரணம் ஸ்திரமற்ற தலைமைத்துவம் தான். கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தர் கூட்டமைப்பை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாதவராக காணப்படுகிறார். அதே போல மூத்த கட்சியும் பெரிய கட்சியான தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜாவும் தனது தலைமைத்துவத்தை நிரூபிக்க முடியாதவராகத் தெரிகிறார். கடந்த பொதுத் தேர்தலில் பெற்ற தோல்விக்குப் பின் தன்னை மீளக் கட்டியெழுப்ப முடியாத ஒருவராகவே தொடர்ந்தும் காணப்படுகிறார். குறிப்பாக கடந்த மார்ச் மாதத்திலிருந்து நிகழும் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் மாவை சேனாதிராஜாவின் இயலாமையும் வழுவழுத்த தன்மையும் வெளிப்படக் காணலாம். கூட்டமைப்புக்கு வெளியே நிகழும் ஐந்து கட்சிகளின் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் மாவை உறுதியான முடிவுகளை எடுக்கவில்லை. ஒன்றில் தமிழரசுக் கட்சியை தனியாகப் பலப்படுத்துவது என்று முடிவெடுக்க வேண்டும். அல்லது ஐந்து கட்சிகளோடு இணைந்து அக்கூட்டைப் பலப்படுத்த வேண்டும். அவர் இரண்டையுமே செய்யவில்லை.

ஆனால் அதற்காக ஐந்து கட்சிகளின் கூட்டோ அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணியோ கூட்டமைப்புக்கு மாற்றாக பலமடைந்து வருவதாக இக்கட்டுரை கருதவில்லை. ஐந்து கட்சிகளின் கூட்டுக்குள் இணைத் தலைவர்கள்தான் உண்டு. எனினும் அது உருகிப் பிணைந்த ஒரு பலமான கூட்டாகத் தெரியவில்லை. அது கூட்டமைப்புக்கு எதிரான ஓர் ஐக்கியம். எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சி கூட்டமைப்புக்குள் இருந்து பங்காளிக் கட்சிகளை நீக்கக்கூடிய வாய்ப்புக்களை ஊகித்து முன்னெச்சரிக்கையோடு உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு அது.

அது போலவே தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தன்னை ஒரு பிரதான கட்சியாக வளர்த்தெடுக்கும் வழி வரைபடத்தை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. மணிவண்ணனின் வெளியேற்றம் அக்கட்சியை எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறது என்பது இனிவரும் தேர்தல்களில் தான் தெரிய வரும். அக்கட்சி எப்பொழுதும் பிரதான நீரோட்டத்திற்கு எதிராக எதிர்ப்பு அரசியலை செய்யும் ஒரு கட்சியாகத் தான் தொடர்ந்தும் காணப்படுகிறது. தமிழ் மக்களின் அரசியலை நிர்ணயிக்கும் ஒரு மிகப் பலமான கட்சியாக வளர வேண்டும் என்ற வழி வரைபடம் அக்கட்சியிடம் இருக்கிறதா? ஏனைய கட்சிகள் காலப்போக்கில் சிதையும்போது தான் படிப்படியாக பலமடையலாம் என்று அக்கட்சி நம்புகின்றதா?



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –


கடந்த நாடாளுமன்ற தேர்தலையொட்டி கூட்டமைப்புக்கு மாற்றாக ஒரு அணியை பலப்படுத்த முயற்சித்த செயற்பாட்டாளர்களுக்கு அது நன்கு தெரியும். ஒரு மாற்று அணியை அப்பொழுது மிகப் பலமாகக் கட்டியெழுப்பக்கூடிய வாய்ப்புக்கள் கிடைத்தன. அவ்வாறு ஒரு மாற்று அணி மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் விதத்தில் ஒரு பலமான அணியாக கட்டியெழுப்பப்பட்டு இருந்திருந்தால் கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு பெருமளவுக்கு தோற்கடிக்கப்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. கூட்டமைப்பு இழந்த ஆறு ஆசனங்களில் மூன்றைத்தான் மாற்று அணி பெற்றது. ஏனைய மூன்றும் தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்டிராத கட்சிகளிடம் சென்றன. இவ்வாறு வாக்குகள் சிதறியதற்கு பிரதான காரணம் மாற்று அணி ஒரு பலமான கூட்டாகத் திரட்சியுறாமை தான்.

எனவே இப்பொழுது படம் மிகத் தெளிவாகத் தெரிகிறது. கூட்டமைப்பின் தலைமையும் பலமாக இல்லை, தமிழரசுக் கட்சியின் தலைமையும் பலமாக இல்லை, ஐந்து கட்சிகளின் கூட்டும் உருகிப்பிணைந்த ஐக்கியமாகத் தெரியவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மேற்படி நிலைமைகளை வெற்றிகரமாக கையாண்டு தன்னை ஒரு பெரும் கட்சியாக வளர்த்துக் கொள்ளும் என்று நம்பத்தக்கதாக கடந்த 10 ஆண்டுகளும் அமையவில்லை. தொகுத்துப் பார்த்தால் கடந்த 12 ஆண்டுகளில் தமிழ் கட்சிகள் உடைந்து கொண்டே போகின்றன. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஐந்து கட்சிகளின் கூட்டு இனி மேல் தான் அதன் பலத்தை நிரூபித்துக்காட்ட வேண்டும்.

இது மிகப் பலவீனமான ஒரு நிலைமை. கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பம் தொடர்ந்து நீடித்தால் மிகக்குறிப்பாக சம்பந்தர் முழுமையாகத் தலைமை தாங்க முடியாத ஒரு நிலைமை தோன்றினால், கூட்டமைப்பு சிதையக்கூடிய வாய்ப்புகளே அதிகமாக தெரிகின்றன. தமிழரசுக் கட்சி தனியாகவும் பங்காளிக் கட்சிகள், ஐந்து கட்சிகளின் கூட்டுக்குள்ளும் இணைந்து செயற்படக்கூடிய வாய்ப்புக்களே அதிகரித்து வருகின்றன. அதாவது அரங்கில் உள்ள தமிழ் தேசிய கட்சிகள் எவையும் தமிழ் மக்களை இப்போதைக்கு ஒரு தேசமாக திரட்டப் போவதில்லை என்று பொருள். நன்றி- நிலாந்தன் இணையம்


ஆண் –பெண் முக அழகை வசீகரப்படுத்தி
மென்மையான சருமத்தை மெருகூட்டி பேணி
பாதுகாக்க தூய சந்தனக் கட்டைகளில்
அரைத்தெடுத்த சந்தனக் கலவை (Sandle Paste)
விரும்புவோர் அழையுங்கள்
(BEST QVALITY - NET WEIGHT 3g)
416 818 9665

# திராவிட மொடல் கோட்பாடு!

தமிழகத்தில் நிறைவடைந்த நகர்ப் புற உள்ளாட்சி தேர்தலில் எதிர்பார்த்ததை விட கூடுதலான வெற்றியை ஆளும் கட்சியான தி.மு.க. பெற்றிருக்கிறது. அதிலும் குறிப்பாக அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. வலிமையாக இருக்கும் கொங்கு மண்டலத்தில் தி.மு.க. பாரிய வெற்றியை பெற்றிருக்கிறது. இதைத் தான் தமிழக முதல்வரான மு.க.ஸ்டாலின் உள்ளாட்சி தேர்தல் வெற்றி குறித்து பேசுகையில் “திராவிட மொடல்“ ஆட்சிக்கு கிடைத்த வெற்றி என்று குறிப்பிட்டார்.

பாராளுமன்றத் தேர்தல் சட்டமன்றத் தேர்தல் ஆகியவற்றில் பிரதமர் மோடி எதிர்ப்பு மற்றும் அ.தி.மு.க.வின் ஊழல் மற்றும் ஆளுமையற்ற தலைமை ஆகியவற்றின் காரணமாக தி.மு.க. வெற்றி பெற்றது. ஆனால் உள்ளாட்சித் தேர்தலில் தமிழகத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகளையும் தி.மு.க. கைப் பற்றியது, தி.மு.க. மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் பிரதிபலிக்கிறது.

இதனிடையே இந்த வெற்றி குறித்து தி.மு.க.வினர் “எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியின் போது தி.மு.க.வையும் தமிழகத்தையும் பா.ஜ.க. திட்டமிட்டு வஞ்சித்து காலூன்ற திட்டமிட்டதை சற்று தாமதமாக உணர்ந்து கொண்ட தலைவர் ஸ்டாலின் மாநில அரசியலில் கவனம் செலுத்துவதைப் போல் தேசிய அரசியலிலும் பா.ஜ.க.விற்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொண்டால் தான் அக்கட்சியை எதிர்காலத்தில் எதிர் கொள்ள இயலும் என்ற யதார்த்தமான உண்மையை உணர்ந்து கொண்டார்.

அதன்பிறகு தான் தீவிரமான பா.ஜ.க. எதிர்ப்பு நிலைப்பாட்டை மேற் கொண்டார். அதன் வெளிப்பாடாகத் தான் உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்றவுடன் “திராவிட மொடல்“ கட்சிக்கு கிடைத்த வெற்றி என்று வெளிப்படுத்தியுள்ளார்“ என்று குறிப்பிட்டுள்ளனர்.

உள்ளாட்சி தேர்தல் நியாயமான முறையில் நடைபெறவில்லை. என்றும் இது செயற்கையான வெற்றி என்றும் வழக்கம் போல் அ.தி.மு.க.வின் தலைவர்கள் விமர்சித்திருக்கிறார்கள். ஆனால் தனித்து போட்டியிட்ட அ.தி.மு.க.விற்கு பல இடங்களில் தி.மு.க. பா.ஜ.க.விற்கு அடுத்ததாக மூன்றாவது இடத்திலும் சில இடங்களில் வைப்புத் தொகையை இழந்திருப்பதும் அக்கட்சி தேயத் தொடங்கியிருக்கிறதோ என்று எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இதன் காரணமாகத்தான் ஜெயக்குமார் கைது விவகாரத்தில் அ.தி.மு.க. வினரை ஒன்றிணைக்க கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாக கட்சியின் மூத்த நிர்வாகிகள் கூறியுள்ளனர். இதனிடையே “உங்களில் ஒருவன்“ என்ற மு.க.ஸ்டாலின் எழுதிய சுய சரிதை நூல் வெளியீட்டு விழாவில் பேசிய ஸ்டாலின் “அனைத்து தேசிய இனங்களுக்கும் சரிநிகர் உரிமை கோரும் “திராவிட மொடல்“ கோட்பாட்டை இந்தியா முழுவதும் விதைப்பது தான் எனது பணி“ என்று முழக்கமிட்டிருக்கிறார்.

அத்துடன் சுயமரியாதை கொள்கையில் தந்தை பெரியார் எழுச்சியில் பேரறிஞர் அண்ணா இயக்கத்தை வழி நடத்துவதில் தமிழினத் தலைவர் கலைஞர் மொழி உரிமையில் பேராசிரியர் ஆகிய



நால்வரின் நிழற் குடையில் நிற்பவன் நான். இவர்கள் தான் என்னை செதுக்கிய சிற்பிகள். இந்த நால்வரும் தனி மனிதர்கள் அல்ல. தத்துவத்தின் அடையாளங்கள். அத்தகைய தத்துவத்தின் அடையாளமாகவே நான் இருக்க விரும்புகிறேன்“ என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதன் மூலம் தமிழக அரசியலில் ஜெயலலிதா கலைஞர் ஆகியோர் மறைவிற்குப் பிறகு ஏற்பட்டிருக்கும் அரசியல் வெற்றிடத்தை நிரப்புவதற்கான தகுதியுள்ள தலைவராக தான் முன்னேறி வருகின்றேன் என்ற செய்தியைச் சொல்லாமல் சொல்லியிருக்கின்றார். தமிழகத்தை பொறுத்தவரை நிறைவடைந்த உள்ளாட்சித் தேர்தல் அரசியல் ரீதியாக இரண்டு வித எண்ணங்களை வெளிப்படுத்தியிருக்கிறது. சென்னை மற்றும் கோவை போன்ற மாநகரப் பகுதிகளில் வலிமையான எதிர்க்கட்சியாக இருக்கும் அ.தி.மு.க.வை பின்னுக்குத் தள்ளி பா.ஜ.க. இரண்டாம் இடத்தை பெற்றிருக்கிறது. இதன் மூலம் தமிழகத்தில் பா.ஜ.க. காலூன்றி இருப்பதையும் வளர்ச்சியடைந்து வருவதும் உறுதியாகின்றது.

அதே தருணத்தில் மக்களாட்சியை வலிமைப்படுத்தும் காரணிகளில் ஒன்றான அரசியல் கட்சிகள் மக்களின் நம்பிக்கையைப் பெறுவதில் தவறான அணுகு முறையை தொடர்ச்சியாக பின்பற்றி வருகிறது.

குறிப்பாக பாராளுமன்ற தேர்தல் மற்றும் சட்டமன்ற தேர்தலில் நல்லதொரு வாக்கு சத வீதத்தை பெற்றிருந்த மக்கள் நீதி மையம், நாம் தமிழர் கட்சி கம்யூனிஸ்ட் கட்சிகள் பா.ம.க., தே.மு.தி.க., போன்ற அரசியல் கட்சிகளின் வாக்கு சத வீதம் உள்ளாட்சித் தேர்தலில் கணிசமாக வீழ்ச்சி கண்டிருக்கின்றது. எதிர்க்கட்சியான அ.தி.மு.க. கூட தனது வழக்கமான வாக்கு சத வீதத்திலிருந்து கணிசமான வாக்குகளை இழந்திருக்கிறது.

இது தொடர்பாக அந்த அரசியல் கட்சிகள் தங்களைத் தாமே சுய பரிசோதனை செய்து கொண்டு மக்களாட்சியில் அடிப்படையான மக்களின் நம்பிக்கையை பெறுவதற்கான மாற்று திட்டத்தை முன் வைத்து செயற்பட வேண்டியுள்ளமையும் அம்பலமாகியுள்ளது. இந்நிலையில் தமிழக மண்ணில் பா.ஜ.க.வின் வளர்ச்சியால் “திராவிட மொடல்“ கோட்பாடு அல்லது “திராவிட வியல் கோட்பாடு“ என்பது தி.மு.க. அ.தி.மு.க. என்ற இரு துருவ திரா விட கட்சிகளை ஒன்றிணைத்து விடுமோ என்ற அச்சம் திராவிட மக்கவிடம் ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய நிலை உருவானால் “திராவிட மொடல்“ கோட்பாட்டை அறிமுகப்படுத்தி பிரபலப்படுத்தி வரும் தி.மு.க. தலைவரான ஸ்டாலின் தான் அதற்கு பதிலளிக்க வேண்டும்.

தி.மு.க. தலைவரான ஸ்டாலின் தேசிய அளவில் அறிமுகப்படுத்தி பிரபலப்படுத்தி வரும் “அனைத்து இந்திய சமூக நீதி கூட்டமைப்பிற்கு“ பீஹார், மேற்கு வங்காளம், கேரளா, தெலுங்கானா ஆகிய மாநில முதல்வர்களின் ஆரம்ப கால ஆதரவு கிடைத்தாலும் பா.ஜ.க.விற்கு சரியான மாற்றாக திகழும் என்பதற்கு எந்த வொரு உத்தரவாதமும் இல்லை. ஆனால் இது குறித்து கருத்து தெரிவிக்கும் தி.மு.க.வின் மூத்த நிர்வாகிகள் பா.ஜ.க.விற்கு மாற்றாக தி.மு.க. மேற் கொண்டு வரும் ஜனநாயக ரீதியிலான முயற்சி தான் இது என்றும் இது தொடர் பான தொடர் சந்திப்பு மற்றும் பேச்சு வார்த்தைகள் நடை பெற்றால் இதன் வடிவம் வீரியமானதாக மாறக்கூடும் என்றும் அதன் முதல் கட்ட முயற்சி தான் “உங்களில் ஒருவன்“ நூல் வெளியீட்டு விழாவிற்கு தேசிய தலைவர்களின் வருகை அமைந்தது“ என்றும் குறிப்பிடுகிறார்கள். இருப்பினும் உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க. அசுர வெற்றியைப் பெற்றிருந்த நிலையில் மார்ச் 4ஆம் திகதி நடைபெற்ற மேயர் மற்றும் துணை மேயர் நகராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவருக்கான மறைமுகத் தேர்தலில் ஜனநாயக ரீதியில் செயற்பட வேண்டும் என்பதை மக்களின் எதிர் பார்ப்பாக இருந்தது. ஆனால் உறுப்பினர்களின் தெரிவில் வெளிப்படைத்தன்மை இல்லாத நிலை காணப்பட்டதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**கட்டுரையாளர்:**
**தமிழகத்தில் இருந்து**
**பத்திரிகையாளர் குடந்தையான்**

இது தி.மு.க. மீதான மக்கள் எதிர் பார்ப்பை புறக்கணிப்பதாக உள்ளது.

இந்நிலையில் தெரிவு செய்யப்பட்ட மேயர்கள் துணைமேயர், நகராட்சித் தலைவர்கள், நகராட்சித் துணைத் தலைவர்கள் அனைவரும் மக்களின் தேவையை அறிந்து செயற்பட வேண்டும் என்பதும் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

தி.மு.க. வெளிப்படைத் தன்மையுடன் கூடிய, ஜனநாயக ரீதியில் செயற்பட்டால் ஸ்டாலின் அறிமுகப்படுத்தியிருக்கும் “திராவிட மொடல்“ ஆட்சிக்கும் அவர் தேசியத்திற்காக அறிமுகப்படுத்தியிருக்கும் “அனைத்திந்திய சமூகநீதி கூட்டமைப்பிற்கும்“ மக்களின் ஆதரவு கரம் நீளும் என்பதே உறுதி.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca மின்னிதழ்
மூலமாக பார்வையிடலாம்



# ரஷ்யப் படையெடுப்பு:- உலகக் கட்டமைப்புகளின் பலவீனம்

# தமிழ் அரசியல் சமூகம் விளங்கிக் கொள்ள வேண்டியது?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



இந்தக் கட்டுரையை எழுதிக் கொண் டிருக்கும் போது ஐரோப்பிய உலகம் பரபரப்படைந்திருக்கின்றது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைன் கிழக்குப் பகுதியின் மீதான இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிட்டிருக்கின் றார். உக்ரைன் இராணுவத்தை ஆயுத ங்களை கைவிடுமாறு ரஷ்யா அறிவித் திருக்கிறது. தனது நாடு எதற்காகவும் எவருக்காகவும் அச்சம் கொள்ள வில்லையென்று உக்ரைன் ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார்.

2014இல் ரஷ்ய சார்பான உக்ரைன் ஜனாதிபதி பதவியிலிருந்து அகற்றப் பட்டார். இதனைத் தொடர்ந்து ரஷ்யா தாக்குதலை தொடுத்தது. உக்ரைனின் கிழக்குப் பகுதிகளில் இடம் பெற்ற யுத்ததில் 14000க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். இதனைத் தொட ர்ந்து உக்ரைனின் கிழக்குப் பகுதிகள் இரண்டை சுதந்திர குடியரசுகளாக ரஷ்யா அறிவித்தது. இந்தப் பகுதி களில் இயங்கும் கிளர்ச்சியாளர்களை ரஷ்யா இயக்கி வருகின்றது.

ரஷ்யா நேட்டோ விரிவாக்கத்தை தொடர்ந்தும் எதிர்த்து வருகின்றது. இந்தப் பின்னணியில் உக்ரைனை மேற்குலகத்தின் கைப்பாவையென்றே புடின் குற்றம் சாட்டி வருகின்றார். இந்தப் பின்னணியில் தான் ரஷ்ய ஆதரவு உக்ரைன் ஜனாதிபதியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து உக்ரைனின் கிழக்குப் பகுதியை ரஷ்யா ஆக்கிர மித்தது. உக்ரைன் நேட்டோ நாடு களின் கூட்டமைப்பில் இணைக்கப்பட மாட்டாது என்னும் உத்தரவாதத்தை புடின் எதிர் பார்க்கின்றார். உக்ரைன் நேட்டோ கூட்டமைப்பில் இணைந்து விட்டால் நேட்டோவின் விரிவாக்கத் தால் ரஷ்யாவின் பாதுகாப்பு கேள்விக் குள்ளாகி விடுமென்று புடின் நிர்வாகம் கருதுகின்றது.

ரஷ்யாவின் இராணுவ நடிவடிக்கையை தொடர்ந்து அமெரிக்கா மற்றும் பிரித் தானியா உள்ளிட்ட நாடுகள் ரஷ்யாவின் மீது பொருளாதார தடையை அறிவித் திருக்கின்றன. ஆனாலும் புடின் இரா ணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு கோரிய போதும் புடின் அதனை கருத் தில் கொள்ளவில்லை. ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் உக்ரைனின் கிழக்குப் பகுதிகள் இரண்டையும் சுதந்திர நாடு களாக ரஷ்யா அறிவித்திருக்கின்றது.

அந்தப் பகுதியில் ரஷ்யாவின் நிரந்தர மான படைத்தளங்களை நிறுவுவதற் கும் தீர்மானித்திருக்கின்றது. ரஷ்ய — உக்ரைன் பிரச்சினையானது அடிப் படையில் பனிப்போர் கால அரசியலில் தொடர்ச்சி. சோவியத் யூனியனின் உடைவிலிருந்து தோன்றிய நாடு தான் உக்ரைன். உக்ரைன் ஒரு நாடல்ல. ஒரு தேசத்திற்கான தகுதி நிலையை யும் உக்ரைன் கொண்டிருக்கவில்லை என்பதே புடினின் வாதமாக இருக்கின் றது. புடினின் வாதத்தின் படி சோவியத் யூனியனின் உடைவிலிருந்து தோன்றிய



நாடு தான் உக்ரைன். சோவியத் யூனிய னின் உடைவுற்ற அரசுகளில் ரஸ்யா வைத் தவிர எவையுமே உண்மை யான நாடுகள் அல்ல. இந்த அடிப் படையில் தான் சோவியத் யூனியனிரு ந்து பிளவுற்ற நாடுகளை ரஸ்யா அணுக முற்படுகின்றது. இந்த அடிப் படையில் தான் ஜோர்ஜியாவிலிருந்து, உடைவுற்ற இரண்டு பகுதிகளை கிரிமியாவுடன் இணைப்பதை ரஷ்யா அங்கிகரித்தது. இதன் தொடர்ச்சி யாகவே உக்ரைனின் கிழக்குப் பகுதி களை சுதந்திர பகுதிகளாக ரஷ்யா அறிவித்திருக்கின்றது.

ரஷ்யாவின் இராணுவ பலத்தை பொறு த்த வரையில் உக்ரைனின் கட்டுப்பாட் டில் வைத்திருப்பது ரஷ்யாவின் ஆதிக்கத்திற்கு அடிப்படையாதொன்றா கும். முன்னால் அமெரிக்க ஜனாதிபதி யான ஜமி காட்டரின் பாதுகாப்பு ஆலோசகர் சிபிக்னியு பிரஸ்சன்ஸ்கி 1990களில் இந்த விடயத்தை எதிர்வு கூறியிருந்தார். அதாவது உக்ரைன் இல்லாத ரஷ்யா ஒரு பேரரசாக வர முடியாது, உக்ரைன் ரஷ்யாவிற்கு அடி பணிந்திருந்தால் ரஷ்யா தன்னிச் சையாகவே பேரரசாகி விடும். ஆனால் உக்ரைன் மேலும் மேலும் செல்லப் பிள்ளையாகிக் கொண்டிருக்கும் சூழ லில் புடின் உக்ரைனை அடி பணியச் செய்வதற்காக இராணுவ பலத்தை பிரயோகிக்கும் முடிவை எடுத்திருக் கின்றார். ஏனெனில் நேட்டோ விரிவாக் கத்தை கட்டப்படுத்துவதும் உக்ரைன் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் செல்வதை தடுப்பதும் சாத்தியமற்ற ஒன்றென்றே புடின் நிர்வாகம் கருதுகின்றது.



இந்தப் பிண்னணியில் தான் இராணுவ பலத்தை பிரயோகிக்கும் முடிவை ரஷ்யா எடுத்திருக்கின்றது. இது எப்படியானதொரு யுத்த வடிவம் பெறும் அல்லது ஒரு சமரச முயற்சிக் கான ஒத்திகையா என்பதை பொறுத்தி ருந்தே நோக்க வேண்டும். இந்த இடத்தில் எழும் கேள்வி? ரஷ்யா இவ்வாறு இராணுவ பலத்தை பிரயோகி த்து உக்ரைனை ஆக்கிரமிக்க முற் படும் போது உலக கட்டமைப்பான ஐக்கிய நாடுகள் சபையால் ஏன் எதனையும் செய்ய முடியவில்லை? எந்த சர்வதேச சட்டங்களின் அடிப் படையில் ரஷ்யா இராணுவ நடவடி க்கையை மேற் கொள்கிறது? இந்தக் கேள்விக்கான பதில் தொடர்பில் தான் தமிழ் அரசியல் சமூகம் அதிகம் சிந்திக்க வேண்டும். ஏனெனில் தமிழ் சூழலில் சர்வதேச கட்டமைப்புக்கள் தொடர்பில் அளவுக்கதிகமான நம்பி க்கை ஊட்டப்பட்டிருக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவை, சர்வதேச நீதிமன்றம், சர்வதேச குற்றவியல் நீதி மன்றம், தொடர்பில் அலாதியான கதை கள் சொல்லப்படுகின்றது.

ஒரு விடயத்தை தெளிவாக புரிந்து கொள்வது அவசியம். அதாவது சர்வ தேச ஒழுங்கு என்பது அடிப்படையில் பலம் பொருந்திய நாடுகளால் தீர்மா னிக்கப்படுவதாகும். பலம் பொருந்திய நாடுகளின் தீர்மானத்திற்கு அடிப்படை யாக இருப்பது அந்த நாடுகளின் இரா ணுவ பலம் ஆகும். பலம் பொருந்திய நாடுகளின் பாதுகாப்பிற்கு நெருக்கடி ஏற்படுமாக இருந்தால் அந்த நாடு களின் இறுதித் தெரிவு இராணுவ வழி முறையாகவே இருக்கும்.

இந்த பின்னணியில் தான் அமெரிக்கா ஈராக்கின் மீது தாக்குதலை மேற் கொண்டு சதாம் உசைனின் இராணுவ த்தை அழித்தது. பின்லெய்டனின் செப்டெம்பர் பயங்கரவாதத் தாக்குதலை தொடர்ந்து ஆப்கானிஸ்தான் மீது தாக்குதலை மேற்கொண்டு 20 வருட ங்கள் அங்கு நிலை கொண்டது. இந்த அடிப்படையில் தான் ரஷ்யா தனது பாதுகாப்பு கேள்விக்குள்ளாகுவதாக குற்றம் சாட்டி அயல் நாடான உக் ரைன் மீது படையெடுத்திருக்கின்றது. ஏந்த சட்டங்களின் அடிப்படையில் இவை நடக்கின்றன? இந்த விடயங் கள் எதனை உணர்த்துகின்றன? அரச ல்லாத மக்கள் கூட்டமான நாங்கள் அரசுகளின் உலகத்தில் இலங்கை அரசொன்றை எதிர்த்து நீதியை கோரு கின்றோம். அரசுகளின் உலகத்தில் அவ்வளவு எளிதாக தமிழர்கள் கோரும் நீதி கிடைத்து விடாது. இன்று தமிழ் சூழலில் மியன்மார் ரோஹிங்யா முஸ்லிம் மக்களின் விவ காரம் தொடர்பில் சிலர் உணர்ச்சி வசப்படுகின்றனர். ஆனால் அவ்வாறான வர்கள் விடயங்களை ஆழமாக புரிந்து கொள்வதில்லை. புரிந்து கொள்ளவும் முயற்சிப்பதில்லை.

2017இல் மியன்மாரிலுள்ள ரிங்கின் மாநிலத்தில் வாழ்ந்த ரோஹிங்யா முஸ் லிம் படுகொலைக்கு ஆளானார்கள். பர்மிய இராணுவமும் அங்குள்ள பிக்கு கள் அமைப்பும் தான் இந்தப் படு கொலையை அரங்கேற்றியது. படு கொலையைத் தொடர்ந்து சுமார் ஏழு இலட்சத்திற்கும் மேற்பட்ட ரோஹிங்யா மக்கள் பங்களாதேஷில் அடைக்களம் புகுந்தனர். இவர்கள் முஸ்லிம் என்பத னால் முஸ்லிம் நாடான பங்களாதேஷ் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத் தது. பிறிதொரு ஆபிரிக்க முஸ்லிம் நாடான காம்பியா இந்த விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றது. முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதியென்னும் வகை யில் உலகளாவிய முஸ்லிகளின் கூட்ட மைப்பான 57 நாடுகளைக் கொண்ட Organisation of Islamic Cooperation (OIC) இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான அமைப்பே காம்பியாவை இந்த விடய த்தில் ஈபடுத்தியது. பங்களாதேஷ் அடைக்கலம் கொடுத்ததற்கு பின்னா லும் குறித்த அமைப்பே இருந்தது. உலகளாவிய இஸ்லாமிய ஒத்துழைப்பு என்னும் வகையிலேயே இந்த விடயம் கையாளப்பட்டது.

இதன் காரணமாக பங்களாதேஷ் பிரத மர் ஷேக் ஹசீனாவை மனித நேயத் தின் தாய் என்று இந்த நாடுகள் வர்ணிக்கின்றது. ஆனால் அந்த மனித நேயத்தின் தாய் இலங்கையின் பொறுப் புக் கூறல் தொடர்பான தீர்மானங்களின் போது இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாகவே வாக்களித்தனர். ரோஹிங் யர்களின் விடயத்தில் மனித நேயம் காண்பித்த பங்களாதேஷ் ஏன் இலங்கை விடயத்தில் தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கவில்லை?

விடயங்களை ஆழமாக புரிந்து கொள் வதற்கு இது ஒரு நல்ல உதாரணம். ஏனெனில் நாடுகளின் முடிவுகள் எவை யும் மனிதஉரிமைகள் சார்ந்து கரிசனையிருந்தாலும் கூட அந்த நாடு களின் பாதுகாப்பு மற்றும் நாடுகளிற் கிடையிலான உறவுகளை கருத்தில் கொண்டு தான் அவர்கள் முடிவுகளை எடுப்பார்கள். இதனை விளங்கிக் கொள் ளாமல் கருத்துக்களை முன்வைப்பது அபத்தம். யுத்தம் முடிவுற்று பன்னி ரெண்டு வருடங்கள் கடந்து விட்ட பின்னரும் கூட தமிழ் மக்களுக்கு பாரியளவில் அநீதியிழைக்கப்பட்டி ருப்பதை ஏற்றுக் கொண்டு முழுமை யாக தமிழர்களுக்கு ஆதரவளிப்பதற்கு ஒரு நாடு இருக்கின்றதா? சர்வதேச நீதிமன்றம் சர்வதேச குற்றவியல் நீதி மன்றம் தொடர்பில் வாதங்கள் செய் வோர் இதுவரையில் ஒரு நாட்டின் ஆதரவையாவது பெற்றிருக்கின்றனரா? இதில் இருந்து நாம் விளங்கிக் கொள் வது என்ன? நாம் மிகவும் பலவீன மான நிலையில் இருக்கின்றோம்.

இந்த நிலையில் பலமான ஒரு நண்பர் இல்லாமல் இந்த அரசுகளின் உலகில் நம்மால் மூச்சு விட முடியாது. இந்த அடிப்படையில் தான் நாம் இந்தியாவின் ஆதரவை எவ்வாறு பெறுவதென்பது (20ம் பக்கம் பார்க்க)

ONLINE INSTRUCTIONS
Mr. Jonathan Ponnudurai Bsc(Hon.)
Grade: 11&12
Physics
Calculus
Advanced Functions
University Level -1
Physics
Calculus
Algebra


647-395 6987
Jonathanp1@live.ca

# சமர்க்களத்தை வெல்வதைவிட போர்க்களத்தை வெல்ல வியூகம் வகுக்கின்றதா ரஷ்யா?

**வேல்ஸிலிருந்து அருஸ்**

**ஒரு சமரை வெல்வதை விட, ஒரு போரை வெல்வதே முக்கியமானது. உக்ரைன் ரஷ்யாவின் சமர்க்களம், ஆனால் மேற்குலகம் ரஷ்யாவின் போர்க்களம். சமர்க்களத்தை தாமதமாக்குவதன் மூலம் போர்களத்தை வெல்ல நினைக்கின்றது ரஷ்யா.**



உக்ரைன் மீது கடந்த 24 ஆம் திகதி ஆரம்பமாகிய ரஷ்யாவின் படை நடவடிக்கை, இன்று பதினைந்தாவது நாளாகத் தொடர்கின்றது. தெற்கு உக்ரைனில் வாழும் மக்களின் மீதான கடந்த எட்டுவருட இனஅழிப்பை நிறுத்துவது, உக்ரைனின் ஆயுதங்களை களைவது, நேட்டோ படையினரின் பிரசன்னத்தை உக்ரைனில் தடுப்பதே தனது நோக்கம் என்கிறது ரஷ்யா.

படைவலுவிலும், ஆயுத வலுவிலும் மேலோங்கி நிற்கும் ரஷ்யா, தனது கணிசமான படை வளத்தைப் பயன்படுத்தினால், இந்த போரை 96 மணிநேரத்திற்குள் முடித்துவிடும் என அமெரிக்காவின் புலனாய்வுத் துறை தெரிவித்திருந்தது. எனவே தான் இரண்டாவது நாள் உக்ரைனின் ஜனாதிபதி வொலமிடீர் செலன்ஸ்கியை பாதுகாப்பாக வெளியேற்றவும் அமெரிக்கா திட்டமிட்டது.

ஆனால் போரின் போக்கு மாற்றமடைந்து விட்டது. உக்ரைன் படையினர் ரஷ்ய இராணுவத்துடன் ஒரு மரபுவழிப் போரை ஆரம்பத்திலேயே தவிர்த்துவிட்டனர். தமது தாக்குதல் உத்திகளை விடுத்து, தற்காப்பு நிலைக்கு மாறிவிட்டனர். முன்னகர்ந்துவரும் ரஷ்யப் படையினரின் பலவீனமான பகுதியைத் தாக்குவது, அதிக சேதங்களை ஏற்படுத்துவது தான் அவர்களின் நோக்கமாக உள்ளது.

கடந்த 8 வருடங்களாக மேற்குலகப் படையினர் உக்ரைன் படையினருக்குக் கடுமையான பயிற்சிகளை வழங்கி, அவர்களை முழு அளவிலான தற்காப்புத் தாக்குதல் படையினராக மாற்றி அமைத்திருந்தனர். குறிப்பாக கனடாவின் 200 இற்கு மேற்பட்ட படைத்துறை பயிற்சியாளர்கள் அங்கு நிரந்தரமாகவே தங்கியிருந்தனர். போர் ஆரம்பமாவதற்கு முன்னரே அவர்கள் அங்கிருந்து வெளியேறியிருந்தனர்.

ரஷ்யாவின் கவசப்படையணியே போரில் அதிக பங்கு வகிக்கும் என்பதால், தாங்கிகளையும், துருப்புக்காவி வாகனங்களையும் தாக்கி அழிக்கும் ஏவுகணைகளை அமெரிக்காவும் பிரித்தானியாவும் தாக்குதல் ஆரம்பமாவதற்கு முன்னரே வழங்கியிருந்தன.

தற்போதும் 14 இற்கு மேற்பட்ட ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கத் தயாரிப்பான ஸ்ரிங்கர் வகை விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும், பல ஆயிரம் கவச எதிர்ப்பு உந்துகணை செலுத்திகளையும் வழங்க முற்பட்டு நிற்கின்றன. அதாவது உக்ரைனை பயன்படுத்தி ரஷ்யாவிற்கு அதிக இழப்புக்களை கொடுக்க வேண்டும் என்பது மேற்குலகத்தின் திட்டம்.

இந்த போரை பொறுத்தவரையில் ஆரம்ப நாட்களிலேயே ரஷ்யா உக்ரைனின் வான் படை, கடற்படை மற்றும் ஏவுகணை படைகளின் பலத்தை அழித்துவிட்டதாகவே நம்பப் படுகின்றது.

உதாரணமாக கடந்த 27 ஆம் நாள் உக்ரைனின் தலைநகர் கிவ்இற்கு வடக்காக உள்ள கொஸ்ரமெல் வான் படை தளத்தின் மீது ரஷ்யாவின் வான் படையினர் நடத்திய இந்த தாக்குதல்களில் உக்ரைனின் ஒரு எஸ்.யூ-24, மூன்று எஸ்.யூ-27, 6 மிக்-29, ஒரு அன்ரனோவ் -26 விமானங்களும், ரஷ்யாவின் ஐ.எல்-76 துருப்புக்காவி விமானமும், இரண்டு கே.ஏ-52 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகளும், ஒரு எம்.-24 ரக உலங்கு வானூர்தியும் அழிவடைந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. அதேசமயம், ஆறு இயந்திரங்களைக் கொண்ட உலகின் தனித்துவமான அன்ரனோவ்-225 என்ற விமானம் அழிவடைந்துள்ளது.

ரஷ்யாவின் சிறப்பு படையணிகள் உக்ரைனின் தலைநகருக்குள் ஊடுருவும் முயற்சிகளை மேற்கொண்ட போதும், இதுவரை ரஷ்யா முழு அளவிலான படை நடவடிக்கையை தலைநகர் மீது மேற்கொள்ளவில்லை என்பது உலகின் பல படைத்துறை ஆய்வாளர்களை சிந்திக்க வைத்துள்ளது.

ஐந்தாம் தலைமுறை தாக்குதல் விமானமான எஸ்.யூ-57 முதற்கொண்டு 1500 இற்கு மேற்பட்ட தாக்குதல் விமானங்கள் உட்பட 3860 இற்கு மேற்பட்ட விமானங்கள் மற்றும் உலங்குவானூர்திகளைக் கொண்ட ரஷ்யாவின் வான் படை, தனது 70 விமானங்களையே இந்த தாக்குதலில் பயன்படுத்துவதும் ஆச்சரியங்களை தோற்றுவித்துள்ளது. அதிலும் குறிப்பாக எஸ்.யூ-35 ரக தாக்குதல் விமானங்களில் சிலவற்றை போர் ஆரம்பமாகிய 4 நாட்களின் பின்னரே களமிறக்கியுள்ளது.

அமெரிக்கா மேற்கொள்ளும் சமர்களில் அது தனது அதிநவீன தாக்குதல் விமானங்கள், விமானம் தாங்கிக் கப்பல்கள் மற்றும் ஏவுகணைகளைப் பயன்படுத்தி, எதிரி நாட்டின் வான்பரப்பைத் தனது கட்டுப்பாட்டுக்குள் விரைவாக கொண்டு வந்துவிடும். ஆனால் ரஷ்யாவின் உத்தி என்பது யாரும் கணிக்க முடியாத நிலையில் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தனது அதிக வளங்களை ரஷ்யா பயன்படுத்தாதபோதும், 98 தாக்குதல் விமானங்கள் உட்பட 210 விமானங்களையும், 45000 படையினரையும் கொண்ட உலகின் 27 ஆவது பெரிய வான்டையான உக்ரைன் வான்படையினரால் ரஸ்யப் படையினருக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொள்ள முடியவில்லை.

அதற்கு சிறந்த உதாரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை (01) தலைநகர் கிவ்விற்கு வடக்காக பெலாரூஸில் இருந்து கிவ் நோக்கிய நெடுஞ்சாலையில் 65 கி.மீ நீளத்திற்கு பல நூறு ரஷ்ய இராணுவ வாகனங்களும், கனரக ஆயுதங்களும் அணிவகுத்து நிற்கின்றன. கிவ்வில் இருந்து 30கி.மீ தொலைவில் அவை நிற்பதால், எந்த நேரமும் தலைநகர் முற்றுகைக்கு உள்ளாகலாம் என எதிர்பார்க்கப்பட்டபோதும், இந்த பத்தி எழுதப்படும் வரையான நாட்களில் அங்கு எதுவும் நடைபெறவில்லை. ஆனால் தொடரணி எந்தவித தாக்குதல் அச்சமுமின்றி அப்படியே நிற்கின்றது.

மேலும் உக்ரைன் வான்படையோ அல்லது ஏவுகணைப் படையோ இயங்கு நிலையில் இருந்தால் இவ்வாறு நிற்கும் திறந்த இலக்குகள் (Open targets) மீது தாக்குதல்களை நடத்தியிருக்க முடியும்.

ஆனால் அவ்வாறு எதுவும் இடம் பெறவில்லை என்பதுடன், உலகின் 27 ஆவது பெரிய வான்படை தனக்கு தாக்குதல் விமானங்களை தருமாறு அண்டைய நாடுகளை கேட்டு நிற்கின்றது.

பல்கோரியா 16 மிக்-29 ரகம் மற்றும் 14 எஸ்யூ-25 ரக தாக்குதல் விமானங்களையும், போலந்து 28 மிக் -29 விமானங்களையும், ஸ்லோவாக்கியா 12 மிக்-29 விமானங்களையும் வழங்கவுள்ளதாக முன்னர் தெரிவித்தபோதும் தற்போது அவை மறுப்பு தெரிவித்துள்ளன.

ஸ்லோவாக்கியாவின் வான்படையினரின் முக்கிய பலமே இந்த விமானங்கள் தான் அதனை வழங்கியதும், பராமரிப்பதும் ரஷ்யா தான். எனவே அதனையும் வழங்கிவிட்டு நடுத்தெருவில் தான் நிற்கவேண்டும் என்பது அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சரின் கருத்து. உங்களிடம் உள்ள விமானங்கை வழங்குங்கள் அதற்கு இணையாக நாம் எப்-16 ரக விமானங்களை வழங்குகிறோம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஆனால் அமெரிக்காவை எவ்வாறு நம்பவது என்பதே தற்போதைய கேள்வியாக இந்த நாடுகின் முன் உள்ளது. ஏனெனில் பின்னர் ஒரு பிரச்சினை என்று வரும்போது அதற்கான உதிரிப்பாகங்களை அமெரிக்கா நிறுத்தி விடும். அதுதவிர அமெரிக்காவின் பராமரிப்பு செலவு மிகவும் அதிகமானது.

இருந்தபோதும், ரஷ்யா ஏன் இந்த போரை ஆமை வேகத்தில் நடத்துகின்றது என்ற கேள்விக்கான பதில்கள் தற்போது மேற்குலகத்திற்கு புரிய ஆரம்பித்துள்ளது. அதாவது போரை தொடர்ந்து ரஷ்யா மீது மேற்குலகம் கொண்டுவந்த பொருளாதாரத் தடையின் எதிர்வி னையை மேற்குலகம் அனுபவிக்க ஆரம் பித்துள்ளது. எண்ணெய் விலை ஒரு பரலுக்கு 120 டொலர்களாக உயர்ந் துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (4) சபொரசியா பகுதியில் உள்ள ஐரோப்பியாவின் மிகப்பெரும் அணுமின் உலையை ரஷ்யா கைப்பற்றியதை தொடர்ந்து மேற்குலகத்தின் பங்கு சந்தைகள் ஆட்டம் காண ஆரம்பித்துவிட்டன. மேலும் உக்ரைனில் இருந்து வெளியேறும் மக்களை பராமரிப்பதிலும் தமக்குள் சண்டையை ஆரம்பித்துள்ளன ஐரோப்பிய நாடுகள்.



அதாவது இந்த போரை ரஷ்யா விரைவாக முடித்திருந்தால், பொருளாதார நெருக்கடியால் ரஷ்யா மட்டும் தான் திணறியிருக்கும் ஆனால் போரின் நீட்சி என்பது அதனை ஏவியவர்கள் மீதான பின்விளைவுகளை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளது.

ஒரு சமரை வெல்வதை விட, ஒரு போரை வெல்வதே முக்கியமானது. உக்ரைன் ரஷ்யாவின் சமர்க்களம், ஆனால் மேற்குலகம் ரஷ்யாவின் போர்க்களம். சமர்க்களத்தை தாமதமாக்குவதன் மூலம் போர்களத்தை வெல்ல நினைக்கின்றது ரஷ்யா. ■

கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தின் "ஜோதி விழா" எதிர்வரும் யூலை 30, 31 -2022
காதுக்கு விருந்தளிக்கும் கனடிய - தமிழகப் பாடர்களின் இசை நிகழ்ச்சிகள் நாவுக்கு சுவையூட்டும்
இலங்கை இந்திய உணவுச் சாவடிகளுடன் மாபெரும் ஜோதி விழா தொடர்புகளுக்கு 416 321 6104

உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ள நிலையில் ரஷ்யாவின் பிரதி தொழில்துறை மற்றும் வர்த்தக அமைச்சர் தலைமையிலான குழுவொன்று கடந்த வாரம் கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டிருந்தது.

உக்ரேன் மீதான போரை அடுத்து ரஷ்யாவுக்கு எதிராக மேற்குலக நாடுகளும் அவற்றின் கூட்டாளிகளும் பொருளாதாரத் தடைகளையும் வேறு தடைகளையும் விதித்து வரும் நிலையில் ரஷ்ய குழுவின் அவசர பயணம் இடம் பெற்றிருக்கிறது. இந்தப் பயணம் முன்கூட்டியே திட்டமிட்ட ஒன்று என தட்டிக்கழிக்க முடியாது. ஏனென்றால்,உக்ரைன் மீதான தாக்குதல் திட்டம் ரஷ்யாவினால் ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒன்று தான்.

அந்தப் படையெடுப்பினால் மேற்குலகம் தடைகளை விதிக்கும் என்றும் ரஷ்யா எதிர் பார்த்தது என்பதை ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் உறுதிப்படுத்தியிருக்கிறார். எனவே ரஷ்ய குழுவின் கொழும்பு பயணத்துக்கும் போர் நெருக்கடியின் விளைவுகளுக்கும் தொடர்பு ஏதும் இல்லை என்று கூற முடியாது.

ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அதன் கூட்டாளிகளின் தடைகள் நாளுக்கு நாள் இறுகி வருகின்றன.

ரஷ்ய விமானங்களுக்கு தடை விதித்த 36 நாடுகளின் விமான சேவைகளுக்கு ரஷ்யாவும் தடை விதித்திருக்கிறது. அத்துடன் உலகின் 3 பிரதான கொள்கலன் கப்பல் சேவை நிறுவனங்கள் ரஷ்யாவுக்கான சேவைகளை நிறுத்தியுள்ளன. இந்த நடவடிக்கைகளால் ரஷ்யா கடுமையான பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. நாளொன்றுக்கு 15 பில்லியன் டொலர்களை உக்ரைன் மீதான படையெடுப்புக்காக ரஷ்யா செலவிடுவதாக கூறப்படுகிறது.

இதன் தாக்கம் உலகம் முழுவதற்கும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட உலகம் துருவ மயப்படுத்தப்பட்ட ஒரு நிலையை பெரும்பாலும் எட்டிக் கொண்டிருக்கிறது. ரஷ்யா மற்றும் நட்பு நாடுகள் ஒரு புறமும் மேற் குலகம் மற்றொரு புறமும் பிரிந்து நிற்க இலங்கை , இந்தியா உள்ளிட்ட நாடுகள் “நடுநிலை“ என்ற கோதாவுக்குள் நிற்கின்றன.

இலங்கை போன்ற நாடுகள் “நடுநிலை“ நாடுகளாக இருந்தாலும் உலகின் போக்கில் இருந்து தற்போதைய போர் சூழலில் இருந்து தப்பிக்க முடியாத நிலையே காணப்படுகிறது.

கொழும்பு வந்த ரஷ்ய குழுவினர் போர் நெருக்கடியால் இருதரப்பு வர்த்தகம் பாதிக்கப்படக் கூடாது என்று வலியுறுத்தியிருக்கின்றனர். இது இரண்டு நாடுகளுக்கும் பொதுவான பிரச்சினையும் கூட. ரஷ்யாவும் இலங்கையும் கடந்த 2020ஆம் ஆண்டில் 395 மில்லியன் டொலர்களுக்கு வர்த்தகம் செய்திருக்கின்றன. ரஷ்யாவுக்கு 163 மில்லியன் டொலர்களுக்கு ஏற்றுமதிகள் செய்யப்பட்டுள்ளன. ரஷ்யாவில் இருந்து 232 மில்லியன் டொலர்களுக்கு பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இதில் தேயிலை ஏற்றுமதி மட்டும் 132 மில்லியன் டொலர்களாகும்.

இந்த வர்த்தகத்தையும் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் வருகையையும் எப்படியாவது தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் முற்படுகிறது. அது போலவே இலங்கைக்கான ஏற்றுமதிகளை உறுதி செய்வதற்கு ரஷ்யாவும் எத்தனிக்கிறது.

பிரதான கப்பல் நிறுவனங்கள் ரஷ்யாவுக்கான கப்பல் போக்குவரத்தை நிறுத்துவதாக அறிவித்துள்ள நிலையில் இலங்கை வழியாக தமது உற்பத்திகளை மறு ஏற்றுமதி செய்யும் முயற்சிகளை ரஷ்யா முன்னெடுக்கும் வாய்ப்புகள் உள்ளன.

சிங்கப்பூரும் ரஷ்யா மீது தடைகளை அறிவித்துள்ள நிலையில் ரஷ்யாவின் கவனம் இலங்கையின் மீது திரும்பியிருப்பது ஆச்சரியமில்லை. தெற்காசியாவில் இலங்கை முக்கியமானதொரு கொள்கலன் முனையமாக உள்ளது. இதனால் இலங்கை வழியாக ரஷ்யா தனது கொள்கலன்களையோ பொருட்களையோ ஏற்றுமதி செய்வதற்கு



திட்டமிடுவதாக கூறப்படுகிறது. இலங்கையைப் பொறுத்த வரையில்

# ரஷ்யப் போர்:- இலங்கையின் சவால்கள்!

ரஷ்யாவுடன் வைத்திருக்கும் நட்பும் பொருளாதாரத் தேவை களும் இதற்கு சாதகமான நிலையை ஏற்படுத்தக் கூடும். அதேவேளை சர்வதேச கப்பல் நிறுவனங்கள் ரஷ்யாவுக்கான போக்குவரத்தை நிறுத்தியுள்ளதால் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி முடங்கிப் போகும் ஆபத்தும் தோன்றியுள்ளது. இந்த ஆபத்தை தவிர்க்க ரஷ்யாவுடன் மாற்று வழி முறைகளில் தொடர்புகளை ஏற்படுத்த இலங்கை முயலக் கூடும். அதேவேளை ரஷ்யாவுடனான கொடுக்கல் வாங்கல்களை பிரதான வங்கிகள் மற்றும் கடனட்டை நிறுவனங்கள் நிறுத்திக் கொண்டுள்ளன. இலங்கை இப்போது எதிர் கொண்டுள்ள டொலர் நெருக்கடியை ரஷ்யாவும் எதிர்கொள்கின்ற நிலை உருவாகியிருக்கிறது.

இலங்கையிடமும் டொலர் இல்லை, ரஷ்யாவிடமும் டொலர் இல்லை. இந்தச் சிக்கலில் இலங்கை தேயிலை ஏற்றுமதிக்கான வருமானத்தை எவ்வாறு திரட்டிக் கொள்ளப் போகின்றது என்ற கேள்வியும் உள்ளது. ரஷ்யா தற்போது தனது நாணயமாக ரூபிளில் வர்த்தகம் செய்வதை ஊக்குவிக்கிறது.

ஏற்கனவே சீனாவின் யுவான்களால் இலங்கையின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு தக்கவைத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் ரூபிள் வர்த்தகம் இலங்கைக்கு இன்னும் பாதிப்பை ஏற்படுத்தும். ரஷ்யாவுடனான வர்த்தகம் மாத்திரமன்றி சுமார் 100 மில்லியன் டொலர்கள் வரையான உக்ரைனுடனான வர்த்தகமும் தற்போது கேள்விக்குறியாக மாறியிருக்கிறது. சர்வதேச பொருளாதார போக்குவரத்து தடைகளைத் தாண்டி இலங்கை ரஷ்யாவுடன் வர்த்தகத்தை தொடருவது சவாலானது.

ஏனென்றால் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு அதிகரித்து வருகின்ற நிலையில் மேற்குலக நாடுகள் தங்களின் தடைகளை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளன. அந்த தடைகளை ரஷ்யாவுக்கு மட்டுப்படுத் தப்பட்டதாக மாத்திரம் இருக்காது. ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்யும் அதனுடன் கள்ள உறவைப் பேணுகின்ற இலங்கை போன்ற நாடுகளுக்கும் கடிவாளம் போடுகின்ற நடவடிக்கையாகவும் அமையும். இப்போது வடகொரியாவுடன் வர்த்தகம் செய்ய நாடுகள் அஞ்சுகின்றதைப் போன்ற சூழல் விரைவில் உருவாக கூடும். அவ்வாறான நிலை ஏற்பட்டால் அது இலங்கையின் பொருளாதாரத்துக்கு மேலும் பாரிய சரிவை

ஏற்படுத்தும். உக்ரைன் விவகாரத்தினால் ரஷ்யா மீது தொடரப்பட்டுள்ள

தடைகள் ஒரு புறத்தில் இருக்க இந்தப் போரினால் உலகளாவிய பொருளாதார மந்தநிலை ஒன்று உருவாகி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

சர்வதேச எரிபொருள் சந்தையில் 11 சதவீத நிரம்பலைச் செய்த ரஷ்யாவில் இருந்து ஏற்றுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் சர்வதேச அளவில் எரிபொருள் விலைகளை அதிகரித்துள்ளன. மார்ச் மாத நடுப்பகுதியில், சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 120 டொலர்களாக அதிகரிக்கும் என்று எதிர்வு கூறப்படுகிறது.

ஒரு பக்கத்தில் போரினால் எரிசக்தி தேவை அதிக ரித்துள்ள நிலையில் உற்பத்தி குறைவு ஏற்பட்டுள் ளதால் சர்வதேச அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஏற்கனவே எரிபொருள் மின்சார



**கட்டுரையாளர்:**
**இந்தியாவில் இருந்து**
**கேணல் ஹரிஹரன்**




நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கும் இலங்கைக்கு இது இன்னும் மோசமான சூழலை ஏற்படுத்தும். இவ்வாறான நிலையில் ரஷ்யாவிடம் எரிபொருள் கொள்வனவுக்காக 300 மில்லியன் டொலர்கள் கடன்வசதியை இலங்கை அரசாங்கம் கோரியுள்ள தாக தகவல் வெளியாகியுள்ளது. உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு ஆதரவாக நிற்பதற்கு பிரதியுபகாரமாக இலங்கை இந்த வசதியை எதிர்பார்ப்பதாக தெரிகிறது.

அதேவேளை கடந்த ஆண்டு அரசாங்கத்தின் உரக் கொள்கையினால் விவசாயம் பெரியளவில் பாதிப்பைச் சந்தித்தது. இந்த ஆண்டில் அதனைச் (21ம் பக்கம் பார்க்க)


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்!

(5ம் பக்கத் தொடர்ச்சி) சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தச் சட்டமூலம் எந்த விதத்திலும் போதாது எனவும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பொறுப்புக்கூறல் தொடர்பில் முன்னேற்றகரமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நடைபெற்ற இலங்கை தொடர்பான கலந்துரையாடலில் பல நாடுகள் கருத்துக்களை முன்வைத்துள்ளன. இதனை நாம் வரவேற்கின்றோம்.

அதேபோல் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என இம்மாநாட்டில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டம் போதும் என இந்தியா ஏற்கவில்லை. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை அந்நாடு வலியுறுத்தியுள்ளது. இந்தியாவின் நிலைப்பாட்டை கருத்தை நாம் வரவேற்கின்றோம். நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் விரைவில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவம் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

(17ம் பக்கத் தொடர்ச்சி) சிந்திக்க வேண்டும். இந்தியாவின் ஆதரவு என்பது வெறுமனே தமிழ் நாடு மட்டுமல்ல. ராஜீவ்காந்தியை நாங்கள் தான்டா கொண்டோம்' என்று கூறுகின்ற கூட்டங்களோடு நிற்பதல்ல. இதன் மூலம் புதுடில்லியை ஒரு போதும் நோக்கி செல்ல முடியாது. புதுடில்லியை நோக்கி செல்லாமல் அரசுகளின் உலகத்தில் தமிழர்களால் மூச்சுவிட முடியாது. புதுடில்லியை நோக்கி செல்வதென்பது பேசுவது போன்று எழுதுவது போன்று இலகுவானதல்ல. இந்தியா தமிழர்கள் விடயத்தில் கரிசனை கொண்டிருந்தாலும் கூட தமிழர் தரப்பால் விடப்பட்ட கடந்த காலத் தவறுகள் புதுடில்லிக்கு சில கசப்பான அனுபவ ங்களை கொடுத்திருக்கின்றது. இதனை போக்கும் வகையில் தமிழர் தரப்புக்கள் செயலாற்ற வேண்டும். அதிகம் அதிகம் புதுடில்லியோடு ஊடாடுவதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்பியது ஓர் ஆரம்பமாக இருக்கலாம். ஆனால் முடிவல்ல. முடிவிற்கு இன்னும் அதிக தூரம் பணயம் செய்ய

# புதுவருடத்திற்கு முன்னர் தேசிய அரசாங்கம்?

(4ம் பக்கத் தொடர்ச்சி) நாங்கள் இரண்டாம் தர பிரஜைகளாக உணர்கின்றோம், நாங்கள் புதிய கூட்டணி குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்துகின்றோம் நிச்சயம் அது இடம் பெறும் என அரச பங்காளிக் கட்சிகளை சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். புதிய கூட்டணிக்கு யார் தலைமை தாஙகுவது என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சியை சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் காலத்தில் அனைத்து கட்சி தலைவர்களும் மாதத்திற்கு ஒரு சந்தித்து கலந்துரையாடி முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன என அவர் தெரிவித்துள்ளார் மகிந்த ராஜபக்சவின் காலத்திலும் இது இடம் பெற்றது என அவர் தெரிவித்துள்ளனர்.

தற்போது முக்கிய கட்சி மாத்திரமே சந்திப்புகளை மேற்கொள்கின்றது, நாங்கள் இரண்டாம்தர பிரஜைகள் போல நடத்தப்படுகின்றோம்,எவரும் மகிழ்ச்சியாகயில்லை என அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளை சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி அமைச்சர்களை கலந்தாலோசிக்காமல் தீர்மானங்களை எடுக்கின்றார், இதன் காரணமாக தங்கள் பதவி பறிபோகலாம் என அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளை சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையின் உள்ளக...

(9ம் பக்கத் தொடர்ச்சி) இலங்கை குறித்து மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச் சேல் பச்லெட்டினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் அவதானம் செலுத்தியிருக்கின்றோம். அதே வேளை எமது நட்புறவு நாடு என்ற ரீதியில் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்தல், மேம்படுத்தல் ஆகியவற்றை முன்னிறுத்தி இலங்கை அரசாங்கத்தினால் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வரவேற்கின்றோம். அதே போன்று நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட செயற்பாடுகளும் பாராட்டத்தக்கவையாகும்.

எனினும் இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட 46-1 தீர்மானமானது பேரவையின் ஸ்தாபகக் கொள்கைகளுக்கு முற்றிலும் முரணானதாகக் காணப் படுகின்றது.


இலங்கையின் அரசியல் உறுதிப்பாடு, இறையாண்மை ஆகியவற்றுக்கு பேரவை மதிப்பளிக்கவேண்டியது அவசியமாகும். அதேபோன்று அந்நாட்டின் தேசிய ரீதியான வரையறைகளுக்கு அமைவாக மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை உறுதி செய்வதற்கான பொறிமுறையை முன்னெடுப்பதற்கு இடமளிக்க வேண்டும். இலங்கைக்குள் தலையீடுகளை மேற்கொள்வதற்கான ஓர் ஆயுதமாக மனித உரிமைகளைப் பயன்படுத்துவதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.


கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் முகாமையாளர், உதவி முகாமையாளர் மற்றும் பொதுவான வேலை செய்யக்கூடிய ஆட்கள் உடனடியாகத் தேவை

தொடர்புகளுக்கு:- 416 321 6104




SHIVA DURGA ASTROLOGY CENTER






PRIVATE & CONFIDENTIAL



PANDIT: KRISHNAM RAJU

Solutions & Suggestions on:

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.
Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob.
Vasthu Prob
Real Estate
and all other Problems

பிரபல மந்திரிமார்களும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது நடக்கப் போறது பற்றிச் சொல்லுவார்

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், விசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
- ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஷ்டி.
- நாகதோசம் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

உடனே பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம். ஏற்கனவே வேறு பல சாஸ்திரிகளை சந்தித்து மனவேதனையுடன் இருந்திருப்பீர்கள். ஒருதரம் பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்.

An Expert Spirtualist treats Black Magic, Witchcraft, Jaadu, Obeau and gives 100% Immediate Protection

880 Markham Rd, Scarborough ON M1H 2Y2
(MARKHAM RD. & PAINTED POST DR.)

437-213-3305

# தமிழர் தரப்பிற்கு பல வெளிகளைத் திறக்கும் உக்ரேன் போர்!

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
சி.அ.சோதிலிங்கம்



ஜெனிவா திருவிழா ஆரம்பித்து விட்டது ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட் அம்மையார் சற்று காட்டமான அறிக்கையை வெளியிட்டுள்ளார். தமிழ் மக்கள் பற்றிய விவகாரமாக ஆரம்பிக்கப்பட்ட ஜெனிவா திருவிழா இன்று இலங்கைத்தீவின் பொது விழாவாக பாரிணாமம் பெற்று விட்டது.



உக்ரேன் விவகாரம் "மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த" நிலைக்கு கொண்டு வந்து விட்டுள்ளது. தற்போது இலங்கையின் நிலை "அன்றாடம் காய்ச்சி" நிலை தான். இலங்கை இந்தியக் கடனில் நாட்களைக் கழிக்கின்றது. இந்தியாவும் இலங்கை சீனா பக்கம் சாய்ந்து விடுமோ என்ற அச்சத்தில் கேட்ட கடன்களை எல்லாம் கொடுத்து வருகின்றது. இலங்கையின் இந்த நெருக்கடிநிலை ஆட்சி மாற்றத்திற்கான வாய்ப்புக்களை சற்று அகல திறந்து விட்டுள்ளது.

சிங்கள மக்கள் முன்னெப்போதையும் விட ஆட்சியாளர்கள் மீது கடும் அதிருப்தியில் இருக்கின்றனர். ஆட்சியாளர்களின் 2 — 3 பெரும் பான்மை கொஞ்சம் கொஞ்சமாக ஆட்டம் காணத் தொடங்கியிருக்கின்றது.

தென்னிலங்கையின் சிவில் முக்கியஸ்தர்கள் ஆட்சி மாற்றத்திற்குரிய கருமங்களை ஆரம்பித்து விட்டனர். அரசு சார்பற்ற நிறுவனங்கள் தொடக்கம் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வரை எவரும் இதற்கு விதிவிலக்காக இல்லை. இந்த ஆட்சி மாற்றக்காரர்கள் தமிழ்த் தேசத்திலும் குடை விரிக்கத் தயங்கவில்லை.

அமெரிக்க — இந்திய — மேற்குலகக் கூட்டின் கோரப்பசிக்கு இலங்கைத்தீவு முழுவதும் தேவை. தமிழர்கள் அவ்வப்போது கறிவேப்பிலை தான். கறிக்கு கொஞ்ச மணமும் தேவை தானே. தமிழர் விவகாரத்தை ஓரத்திலாவது சேர்க்காவிட்டால் கறியின் வாசம் குறைந்து விடும்.

உக்ரேனில் போர் இரண்டு வாரத்தைக் கடக்கப் போகின்றது. ஆயிரம் பொது மக்கள் கூட இறக்கவில்லை. ஆனால் குற்றவியல் நீதிமன்றத்திற்கு வரிந்து கட்டிக் கொண்டு மேற்குலக நாடுகள் முறையிட்டு விசாரணையைத் தொடக்கியுள்ளன. இன அழிப்பும் குற்றங்களில் ஒன்றாக சேர்க்கப்பட்டுள்ளது.

ஆனால் ஐ.நா.நிபுணர் குழு அறிக்கையின்படி 40,000 தமிழ்மக்கள் இறந்தும் (மறைந்த மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பின் அறிக்கைப்படி 1,46,000பேர்) தமிழர் விவகாரம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையைத் தாண்டவில்லை. அமெரிக்க மேற்குலகக் கூட்டு உக்ரேனியர்களுக்கு ஒரு நீதியையும் தமிழர்களுக்கு இன்னோர் நீதியையும் வழங்குகின்றதா?

மேற்குலக ஜனநாயகம் வழங்கும் நீதி இது தானா? உக்ரேனிய அதிபர் இளவயதுக்காரர்களின் வெளியேற்றத்தை தடுக்கின்றார். சிறுவர்களுக்கு ஆயுதங்களை வழங்குகின்றார் மேற்குலக கண்களுக்கு இவையெல்லாம் தெரியவில்லை. சில வேளை கிட்டப்பார்வை அவற்றிற்கு மந்தமாக இருக்கலாம். சர்வதேச நீதி என்பது மேற்குலக நலன்களின் நீதிதான்.

ஐநாமனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட் அம்மையார் சுட்டிக் காட்டிய விடயங்களில் பொறுப்புக் கூறல், நல்லிணக்கம், அதிகாரப்பரவலாக்கம் என்பவையே நேரடியாக தமிழர்களை மையப்படுத்தியவை. மேலோங்கும் சிங்கள பௌத்த தேசிய வாதம், பயங்கரவாதத் தடைச்சட்டம், தண்டனை விலக்கீடு சிறுபான்மையினர் ஒடுக்கப்படுதல் என்பன அண்மைக் காலமாக முஸ்லிம்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் எதிரான செயற்பாட்டின் வெளிப்பாடுகளே. ஏனைய விவகாரங்களோடு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அடித்தளமான பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் என்பன பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளது. போர்க் குற்ற விவகாரம் சிறிதாக்கப்பட்டு மனித உரிமை விவகாரம் பெரிதாக்கப்பட்டுள்ளது. கடுமையான அழுத்தங்கள் பெரிதாக இல்லை. முன்னர் மனித உரிமைகள் பேரவைக்கு அப்பால் போர்க்குற்ற விவகாரம் செல்ல வேண்டும். தமிழ்த் தரப்பு தமது ஒற்றுமையின் சீத்துவத்தை சர்வதேச மயப்படுத்த மூன்று தமிழ்த்தேசிய அணிகளும் மூன்று கடிதங்களை மனித உரிமைகள் பேரவை உயர்ஸ்தானிகருக்கு அனுப்பியுள்ளன.

இக்கடிதங்களின் உள்ளடக்கத்தில் பெரிய வேறுபாடுகளோ கொள்கை முரண்பாடுகளோ இருக்கவில்லை அவ்வாறாயின் ஏன் தனித் தனிக் கடிதங்கள். காணிப் பறிப்புக்கு எதிராக ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் ஒன்றாகக் குந்தியவர்கள் இங்கு மட்டும் பிரிந்து செயற்படுவதேன்? அரசியல் தவிர வேறொன்றுமில்லை.

அதுவும் மீன் அணியும் சைக்கிள் அணியும் ஐ.நா. மனித உரிமை பேரவை உயர்ஸ்தானிகரின் அறிக்கை வெளிவந்த பின்னர் தான் கடிதங்களை அனுப்பியுள்ளன. உயர்ஸ்தானிகர் அறிக்கை தயாரிப்பதற்கு முன்னர் அல்லவா அனுப்பியிருக்க வேண்டும்.

வாக்கு அரசியல் தவிர இதன் நோக்கம் வேறு என்ன? இந்த இடத்தில் சம்பந்தனைப் பாராட்டலாம். அவர் பெப்ரவரியிலேயே கடிதத்தை அனுப்பியிருந்தார். அது கூட தாமதம் தான். அக்கடிதத்திற்கு முன்னரேயே உயர்ஸ்தானிகரின் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கும்.

இந்தத் தடவை ஜெனிவா திருவிழாவிற்கு நேரடிப் பயணத்தை தமிழ்க் கட்சிகள் எவையும் மேற்கொள்ளவில்லை. இதில் மட்டும் ஒற்றுமையை பகிரங்கப் படுத்தியுள்ளனர். பொது அமைப்புக்களிலிருந்தும் புலம்பெயர் அமைப்புக்களிலிருந்தும் கூட எவரும் பெரிதாகச் செல்லவில்லை.

அதேவேளை அரச தரப்பில் இருந்து வெளிநாட்டமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நீதி அமைச்சர் அலிசப்ரி உட்பட வலுவான குழுவினர் சென்றிருக்கின்றனர். இவர்களுடன் வெளிநாடு வாழ் இலங்கையர்களும் இணைந்திருக்கின்றனர். இரு தரப்பினரும் இணைந்து திட்டமிட்ட வகையில் பிரசாரத்தை மேற் கொள்கின்றனர். அதை முறியடிக்கக் கூடிய வகையில் தமிழ்த் தரப்பிடமிருந்து பெரிதாக எதுவும் நடக்கவில்லை.

ஜெனிவா களைப்பு வந்து விட்டதோ தெரியாது. ஒன்றை அளவுக்கதிகமாக நம்புவதும் அது பொய்க்கின்ற போது விரக்தியில் முழுமையாகக் கைவிடுவதும் தமிழ் அரசியலின் மரபு ரீதியான அணுகு முறை. இந்த மரபு ஆரோக்கியமானதல்ல. அதனை அதுவாகவே மதிப்பிட்டு செயற்பாடுகளை முன்னெடுப்பதே புத்திசாலித்தனமானதாகும். இந்த விவகாரத்தில் பின் பற்ற வேண்டியதான மந்திரம் "நம்பவும் வேண்டாம் விலகவும் வேண்டாம்" என்பதே. ஜெனிவா தொடர்பாக பல விமர்சனங்கள் இருந்தாலும் அது தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரு சர்வதேச அரசியல் களம்.

இந்த அரசியல் களம் தமிழர் விவகாரத்தை தொடர்நிலையில் பேசு பொருளாக வைத்திருப்பதற்கு உதவுகின்றது. ஒரே நேரத்தில் சர்வதேச நாடுகள் ஊடகத்துறை அரச சார்பற்ற அமைப்புகள் என் பவற்றுடன் தொடர்புகொள்ள முடிகின்றது. கூட்டத்தொடர் காலத்தில் உலகின் கவனம் ஜெனிவாவில் குவிவதால் சர்வ தேச அபிப்பிராயத்தை உருவாக்க முடிகின்றது. ஜெனிவாவில் செல்வாக்கு செலுத்தும் அமெரிக்க தலைமையிலான மேற்குலகம் இலங்கை அரசிற்கு வன்மையாக அழுத்தங்களைக் கொடுக்க பின்னின்றாலும் கோவையை மூடிவிடுவதற்கு தயாராக இல்லை. இது தமிழ்த்தரப்பிற்கு சாதகமான அம்சம். தற்போது உக்ரேன் விவகாரம் இரண்டு வாய்ப்புக்களை திறந்துவிட்டுள்ளது. ஒன்று உக்ரேன் விவகாரம் முன்னரும் கூறியது போல சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டு விசாரணையும் ஆரம்பமாகியுள்ளது. 30க்கும் மேற்பட்ட நாடுகள் கையெழுத்திட்டு முறைப்பாட்டை வழங்கியுள்ளன. இன அழிப்புக்குற்றமும் சுமத்தப்பட்டுள்ளது. எனவே தமிழ்த் தரப்பும் உக்ரேனுக்கு ஒரு நீதி தமிழ் மக்களுக்கு ஒரு நீதி என்ற கேள்வியை எழுப்பும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இரண்டாவது சோவியத் யூனியன் கால பனிப்போர் சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது. மாற்று அணியில் பொருளாதார வல்லரசான சீனாவும் தொழில்நுட்ப வல்லரசான ரஷ்யாவும் ஒன்றிணைந்துள்ளன. இவற்றுடன் ஈரான், சிரியா, வடகொரியா என்பனவும் இணையும். இந்தியா மதில்மேல் பூனையாக பனிப்போர் கால அணிசேராக் கொள்கையை பின்பற்ற முயற்சிக்கின்றது.

சீனா தாய்வான் மீது படையெடுப்பை நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. இப்புதிய பனிப்போர் சூழல் தமிழ் அரசியலுக்கு வாய்ப்பானது. முன்னைய பனிப்போர் காலமும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வாய்ப்பான காலங்களாகவே இருந்தன. ஒரு தரப்பு அரசிற்கு ஆதரவளித்தால் மறுதரப்பு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக இருப்பதே இதற்குக் காரணமாகும். இந்தியா, தமிழ் விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவளித்த காலமும் பனிப்போர் காலம் தான். என்ன தான் சாதகமான சூழல்கள் வந்தாலும் அதனைப் பயன்படுத்துவதற்கு தமிழ்த் தரப்பு தயாராக இருக்க வேண்டும். அதற்கான அறிகுறிகள் கொஞ்சமும் தெரியவில்லை. தமிழ் மக்களைப் பீடித்த சோகம் இது தான்.

## இந்தியாவின் நிலைப்பாடு புதிதல்ல!


(5ம் பக்கத் தொடர்ச்சி) விடயத்தை மறைமுகமாக சுட்டிக் காட்டியிருக்கின்றார். அதாவது, இலங்கையின் நண்பன் மற்றும் உடனடி அயல்நாடு என்பதை அழுத்திக் குறிப்பிட்டிருப்பதன் மூலம் இலங்கையின் பிரச்னையில் தலையீடு செய்யும் பிரதான தரப்பு நாம் தான் என்பதையும் அவர் மறைமுகமாக சுட்டிக் காட்டி யிருக்கின்றார்.

இந்த நிலையில் 13ஆவது திருத்தத்தை வைத்துக் கொண்டு விவாதம் புரிவது அர்த்தமற்றது. ஏனெனில், இந்தியாவின் தலையீடு எப்போதும் இதனடிப்படையில் தான் நிகழும். இது தான் இன்றைய யதார்த்தம். இந்த யதார்த்தத்தை புரிந்து கொண்டால் தான் ஈழத் தமிழர் கள் அரசியலை முன்னெடுக்க முடியும். இந்தியாவிடம் ஒரு கோரிக்கையை முன்வைத்து விட்டு பின்னர் அதற்கு தலைகீழான வகையில் மேற்கு நாடுகளுக்கு கதை சொல்லும் அணுகுமுறைகளை கைவிட வேண்டும். இந்தியா ஒருபோதும் (இன்றைய சூழலில்) இந்த பிராந்தியத்தில் மேற்கு நாடுகள் தலையீடு செய்யும் வகையிலான முடிவுகளுக்கு ஆதரவளிக்காது. சர்வஜன வாக்கெடுப்பு கோருவோர் இதனை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். விடயங்களை உணர்ச்சி வசப்பட்டு நோக்காமல் அறிவுபூர்வமாக நோக்க வேண்டும். இந்தியாவுக்குத்தான தேவையிருக்கின்றது என்றவாறான, மழலை பேச்சுக்களில் ஈடுபடுவதை நிறுத்திக் கொள்வது மக்களுக்கு நல்லது.


(19ம் பக்கத் தொடர்ச்சி) சரிப்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கின்ற நிலையில் தான் உக்ரைன் போர் வெடித்திருக்கிறது. உலகில் அதிக பட்சமாக 14சதவீதமான இரசாயன உரத்தை ரஷ்யாவே உற்பத்தி செய்கிறது. அடுத்து அதன் நட்பு நாடான போரில் மறைமுக பங்கு வகித்துக் கொண்டிருக்கும் பெலாரஸ் 9 வீத உரத்தை உற்பத்தி செய்கிறது. இந்த இரண்டு நாடுகளும் கிட்டத் தட்ட உலகின் கால்பங்கு இரசாயன உர உற்பத் தியை தீர்மானிக்கும் நிலையில் உள்ளன. பொருளாதார தடைகளால் இந்த உர ஏற்றுமதிகள் பாதிக்கப்படும். இது இலங்கைக்கும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. ஆக ரஷ்யாவின் போர் இலங்கையை இன்னும் மோசமான நிலைக்குத் தள்ளிச் செல்வதாகவே இருக்கப் போகிறது.




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எடுத்த காரியத்தில் ஏற்பட்ட தடை தாமதம் நீங்கும். உடல் ஆரோக்கியம் பெறும். வழக்குகளில் சாதகமான பலன் கிடைக்கும். அதேவேளையில் கடுமையான முயற்சிகளும் தேவை. குடும்பத்தில் இருந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த மனக்கசப்பு மாறும். குழந்தைகளின் நலனில் அக்கறை காட்டுவதன் மூலம் அவர்களிடம் நன்மதிப்பை பெறுவீர்கள். மனநிம்மதி உண்டாகும். உறவினர்கள் வருகை இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பான போட்டிகள் நீங்கும். உத்யோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும். பெண்கள் எந்த ஒரு செயலையும் மிகவும் அக்கறையுடன் செய்து முடிப்பீர்கள். மனதில் உற்சாகம் உண்டாகும்.




ரிஷபராசி அன்பர்களே! சுப காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். மனதில் இருக்கும் குழப்பம் நீங்கும். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். கணவன் மனைவிக்கிடையே சகஜநிலை நீடிக்கும். குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் செயல்திறன் அதிகரிக்கும். உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் ஆக்கபூர்வமான செயல்களை மேற்கொண்டு வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். உத்யோகத்தில் மேலதிகாரிகள் கூறிய பணிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும். பெண்களுக்கு பயணங்களின் போதும், வாகனங்களை பயன்படுத்தும் போதும் கவனம் தேவை. நன்மை தீமை பற்றிய கவலை இல்லாமல் எதையும் செய்ய முற்படுவர்.




மிதுனராசி அன்பர்களே! எல்லா முயற்சிகளிலும் வெற்றி உண்டாகும். சுபச்செலவுகள் இருக்கும். பேச்சு திறமை கை கொடுக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்களை ஏதாவது குறை கூறுவார்கள். அனுசரித்து செல்வது நன்மை தரும். கணவன் மனைவிக்கிடையே தேவையில்லாத விஷயத்தால் மன வருத்தம் ஏற்படலாம். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் வியாபாரம் மிதமாக இருக்கும். எதிர்பார்த்த பணவரத்து தாமதப்பட்டாலும் கைக்கு வந்து சேரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கடினமான பணிகளை செய்ய வேண்டி இருக்கும். உங்களது பேச்சு திறமையால் மேலிடத்தில் இருப்பவர்களிடம் நல்ல பெயர் பெறுவீர்கள். பெண்களது செயல்களுக்கு பக்கபலமாக குடும்பத்தினர் இருப்பர்.




கடகராசி அன்பர்களே! எதிலும் தன்னம்பிக்கையுடன் ஈடுபட்டு காரியங்களை செய்து முடிப்பீர்கள். புதிய தொடர்புகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். முக்கிய நபர்களின் அறிமுகமும் நட்பும் கிடைக்கும். எதிர்பார்த்தபடி எல்லாம் நடக்கும். அண்டை அயலாரை அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்து செல்வது நன்மை தரும். நண்பர்கள் மற்றும் உறவினர்கள் ஆதரவாக இருப்பர். தொழில் வியாபாரத்தில் வேகம் அதிகரிக்கும். எதிர்பார்த்தபடி பொருட்களை அனுப்புவதில் இருந்த தாமதம் நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் திடீர் பயணத்தை சந்திக்க நேரலாம். மேலதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது. பெண்களுக்கு மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் உண்டாகும்.





சிம்மராசி அன்பர்களே! சாதூரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்க பெறுவீர்கள். ராசிநாதன் குருவின் சார பலன்கள் மூலம் இசை நாட்டியம் போன்ற கலைகளில் ஆர்வம் பிறக்கும். வீண் ஆசைகள் தோன்றலாம். மனதை கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. குடும்பத்தினரின் தேவையை பூர்த்தி செய்வீர்கள். கணவன், மனைவிக்கிடையே ஒற்றுமை ஏற்படும். குழந்தைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். வாக்கு வன்மையால் லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. அலுவலகத்தில் உங்களுக்கான அங்கீகாரம் அதிகரிக்கும். பெண்கள் அடுத்தவர் பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.




கன்னிராசி அன்பர்களே! மனத்துணிவு உண்டாகும். தடை தாமதம் விலகும். மற்றவர்கள் விஷயத்தில் கவனம் செலுத்துவதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை காணப்படும். பிள்ளைகள் உங்கள் சொல்படி கேட்டு நடப்பது மன மகிழ்ச்சியை தரும். நினைத்ததை நடத்தி முடிப்பீர்கள். சொத்துப் பிரச்னை தீர்வு பெறும். தொழில் வியாபாரத்தில் எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். வேலைகளை செய்து முடிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். பெண்கள் எந்த காரியத்தையும் வேகத்துடன் செய்து முடிப்பர். விருந்தினர் வருகை உண்டு.








துலாம் ராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்தையும் சிறப்பாக முடிப்பீர்கள். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். அமைதியாக இருக்க முயன்றாலும் கூட மற்றவர்கள் வலுக்கட்டாயமாக பேசுவார்கள். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பாக அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களின் நிர்வாக திறமை பளிச்சிடும். எதிர்ப்புகள் குறையும். காரியதடை அகலும். பெண்களுக்கு எந்த ஒரு வேலையையும் அடுத்தவரை நம்பி ஒப்படைக்காமல் நேரடியாக கவனிப்பது நன்மை தரும். இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக முடியும். சுலபமாக முடிந்துவிடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமதமாகலாம்.





விருச்சிகராசி அன்பர்களே! முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். வீண்செலவு குறையும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். திருமண முயற்சிகள் கைகூடும். வாழ்க்கை துணையால் பணவரத்து இருக்கும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கும். குடும்பத்தில் பொன்னான தருணங்கள் நிகழும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறி வேகம் பிடிக்கும். உத்யோகத்தில் புத்தி சாதூர்யம் அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். பணி உயர்வு சம்பந்தமான தேர்வுகளில் தேர்ச்சி பெறுவீர்கள். மேலிடத்தின் கனிவான பார்வை உங்கள் மீது விழும். பெண்களுக்கு மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கி நட்பு உண்டாகும். கலைத்துறையினருக்கு வெளியூர் பயணம் அதன் மூலம் அலைச்சல் உண்டாகலாம். சாமர்த்தியமான பேச்சால் காரிய தடை நீங்கும்.




தனுசுராசி அன்பர்களே! பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் சமூகத்தில் அந்தஸ்தும் மரியாதையும் கிடைக்க பெறுவீர்கள். சுப நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடைபெறும். வழக்குகள் உங்களுக்கு சாதகமான நிலையில் இருக்கும். குடும்பத்தில் பிள்ளைகளால் நன்மை உண்டாகும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு திறம்பட செயல்படுவர். உறவினர்கள் வருகை இருக்கும். வீடு, வாகனம் வாங்கும் முயற்சி சாதகமான பலன் தரும். தொழில் வியாபாரம் லாபகரமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல்திறமை அதிகரிக்கும். பங்கு மார்க்கெட்டில் முன்னேற்றம் காணப்படும். பெண்களது செயல்களுக்கு மற்றவர்களது ஆதரவு கிடைக்கும். எந்த சிந்தித்து செயல்படுவது நல்லது.




மகரராசி அன்பர்களே! தன்னம்பிக்கையால் காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். மனதில் இருக்கும் கவலைகள் மறையும். எதிலும் ஒரு வேகம் உண்டாகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடும் போது கவனம் தேவை. குடும்பத்தில் திருப்தியான நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளுடன் மனதுக்கு பிடித்த இடத்திற்கு சென்று பொழுதை கழிப்பீர்கள். வீடு மனை போன்ற முதலீடுகளில் ஆர்வம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மெத்தன போக்கு நீங்கி வேகம் பிடிக்கும். உத்யோகஸ்தர்கள் புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவர். மேலிடத்தை அனுசரித்து செல்வது நல்லது. பெண்களுக்கு செல்வ சேர்க்கை உண்டாகும். எல்லோரையும் எளிதில் வசீகரிக்கும் திறமை அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியை பற்றிய கவலை உண்டாகும்.




கும்பராசி அன்பர்களே! மனதில் நிம்மதி உண்டாகும். உதவி என்று வருபவர்களுக்கு தயங்காமல் உதவிகளை செய்வீர்கள். ஆடை, ஆபரணம் வாங்குவதால் செலவு உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்கள் யோசனையை கேட்டு நடந்து கொள்வது மனதிற்கு திருப்தியை தரும். கணவன், மனைவிக்கிடையே இருக்கும் அன்பு நீடிக்கும். தந்தை வழியில் இருந்து வந்த கருத்து மோதல்கள் அகலும். பிதுரார்ஜித சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். தொழில் வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தை கடை பிடிப்பது நல்லது. நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும். பெண்கள் மற்றவர் ஆலோசனையை கேட்டு அதன்படி நடந்து காரிய வெற்றி அடைவர்.




மீனராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் எந்த காரியத்தையும் சுலபமாக செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி க்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குழந்தைகள் எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்கள் உறவினர்கள் மூலம் தேவையான உதவி கிடைக்கும். வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும். தாமதமாகி வந்த சுப காரியங்கள் சிறப்பாக நடக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் வேலைபளு குறைந்து மகிழ்ச்சியுடன் காணப்படுவர்.அலுவலகத்தில் இருந்து வந்த பிரச்னைகள் அகலும். பெண்கள் சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி காண்பர். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பர். தேவையான நிதியுதவி கிடைக்கும்.


எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!

ஈழநாடு 29வது ஆண்டு விழா

சங்கீத சங்கமம் 2022

07 ஆகஸ்ட் 2022

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO · SWAMI SARANAM

# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8, Tel: 416-321-6104



## ஸ்ரீ ஐயப்ப சுவாமி விசுக்கனி அலங்கார உற்சவமும் ஐயப்பன் விரத மாலை அணிதலும்

**காலம்: 31.03.2022 வியாழக்கிழமை முதல் 17.04.2022 ஞாயிற்றுக்கிழமை வரை**

"ஐயனை நாடுங்கள்! அவன் புகழ் பாடுங்கள்! என்றும் புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்"

ஐயப்பன் மெய்யடியார்களே!

மகர மண்டல விரதத்திற்கு மாலை அணிந்து விரதமிருப்பதைப் போன்று விசுக்கனி தரிசனத்திற்காக மாலை அணிந்து விரதமிருக்கின்ற மரபு ஸ்ரீ ஐயப்பன் வழிபாட்டில் சிறப்பு நடைமுறையாகும்.

31.03.2022 வியாழக்கிழமை காலை 7:00 மணிக்கு கணபதி ஹோமத்துடன் விசுக்கனி அலங்கார உற்சவம் ஆரம்பமாகும். 17.04.2022 ஞாயிற்றுக்கிழமை வைரவர் மடை வரை காலை, மாலை சிறப்பு அபிஷேகம், சிறப்பு பூஜை, படிப்பூஜை, வசந்தமண்டப பூஜை, சுவாமி புறப்பாடு என்பன நடைபெற உள்ளதால், அடியார்கள், மாலை அணிந்து விரதமிருக்கும் சுவாமிமார்கள், தினமும் காலை, மாலை திருவிழா உபயம் செய்வோர் ஆலயத்தில் பதிவு செய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

### உற்சவ கால நிகழ்ச்சி நிரல்

சிறப்பு அபிஷேகம் காலை 10:00 மணிக்கும்,
மாலை 6:00 மணிக்கும், காலைப் பூஜை 11:00 மணிக்கும்,
மாலைப்பூஜை 7:30 மணிக்கும், சுவாமி புறப்பாடு
மதியம் 12:00 மணிக்கும்,
மாலை 8:30 மணிக்கும் நடைபெறும்.

### விசுக்கனி ஸ்ரீ ஐயப்பன் விரத மாலையணிதல்

31.03.2022 வியாழக்கிழமை காலை 7:00 மணிமுதல் மதியம் வரை,
மாலை 6:00 மணி முதல் இரவு 9:00 மணிவரை
விசுக்கனிக்காக ஐயப்பன் விரத மாலை அணிந்து கொள்ளும் சுவாமிமார்கள்
ஆலய குருசுவாமி கைகளால் மாலை அணிந்து கொள்ளலாம்.

### நெய் நிரப்புதல்

10.04.2022 ஞாயிற்றுக்கிழமை
காலை 8:00 மணி முதல்
மதியம் வரை நெய் நிரப்புதல்
வைபவம் இடம்பெறும்

### சுவாமிமார்களின் நெய்யபிஷேகம்

14.04.2022 வியாழக்கிழமை காலை 7:00 மணிக்கு இருமுடி சுமந்து,
18 படிகள் ஏறி சுவாமிமார்களின் நெய்யபிஷேகம் நடைபெறும்.
புதுவருடப்பிறப்புப் பூஜை 13.04.2022 புதன்கிழமை மாலை 10:19 மணிக்கு நடைபெறும்.
14.04.2022 வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், புதுவருட பூஜையும் இடம் பெறும்.


இறைபணியிலுள்ள அறங்காவல் சபையினர்



## வீடு, வியாபார நிலையங்கள் வாங்க, விற்க..
## Buying / Selling / Leasing

$ 948,000


Mclevin/Tapscott
Detached 2-Storey
Bedrooms: 3
Washrooms: 3
Renovated

$ 999,990


Morningside/Mcnicoll Ave
Semi-Detached 2-Storey
Bedrooms: 3
Washrooms: 4
No Sidewalk.

$ 949,900


Brimley / Lawrence
Detached Bungalow
Bedrooms: 3
Washrooms: 1
Sep. Entrance/2 Car Garage

$ 888,888


Brimley / Ellesmere
Detached Sidesplit 3
Bedrooms: 3
Washrooms: 2
Sep Entrance/Well Kept

$ 1,299,900



Conlins Rd & Ellesmere Rd
Detached 2-Storey
Bedrooms: 4 + 2
Washrooms: 4
Well Maintained

$ 1,500,000


Lawrence & Rouge Hills
Detached 2-Storey
Bedrooms: 4 + 1
Washrooms: 4
Renovated W/300K

$ 1,488,000


Warden / Huntingwood
Detached Sidesplit 4
Bedrooms: 4 + 1
Washrooms: 3
Lots Of Upgrades!

$ 999,000


Steels Ave./Mccowan Rd.
Detached 2-Storey
Bedrooms: 3 + 2
Washrooms:4
Updated

$ 998,000


Markham Rd/Steeles Av.
Detached 2-Storey
Bedrooms: 3 + 2
Washrooms: 4
Sep Entrance/Well Maintained

$ 1,588,000


Markham Rd/14th Ave
Detached 2-Storey
Bedrooms: 4
Washrooms: 3
High Ceilings



KAMAL NAVARATNAM REAL ESTATE

கமல் நவரட்ணம்
KAMAL NAVARATNAM
Sales Representative

Direct:
416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
www.kamalrealtor.ca

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office:
416-287-2222
Fax:
416-282-4488
1265 Morningside Ave.,
Suite 203, Toronto,
ON M1B 3V9

*Trusted and reliable services*


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


காப்புறுதிச் சேவையில் 20 ஆண்டுகள்
ஆதரவு தந்த அனைவருக்கும்
நெஞ்சார்ந்த நன்றி
DISABILITY INSURANCE
SUPER VISAS
NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS
RRSP & RESP
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
647 401 5800 / 416 439 2800
218 EXPORT BLVD, MISSISSAUGA, SUITE 209-211, L5S 0A7